விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 346 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 14 ஞாயிற்றுக்கிழமை (30.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உலகளாவிய பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்

| ஜெர்மனி | | பிரான்ஸ் | |
|---|---|---|---|
| <5KG | 2350/= | <5KG | 2650/= |
| <11KG | 1950/= | <11KG | 2100/= |
| <16KG | 1930/= | <16KG | 1950/= |
| <21KG | 1900/= | <21KG | 1900/= |

01kg க்கான கட்டணம்
011 4 654 444
(5481)
GTV Express
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## அசாதாரண நிலை காரணமாக அவசரகாலச் சட்டம் அமுல்

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், பொது வாழ்க்கையை நிலைநிறுத்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதை உறுதிசெய்வதற்கும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்தித குமநாயக்கவின் கையொப்பத்துடன்

23ஆம் பக்கம் பார்க்க

## கடலுக்குள் சென்றது டித்வா புயல்

### வானிலை இன்றுடன் சீரடையும்




(கொழும்பு)

டித்வா புயலானது கடலுக்குள் சென்றுள்ளது. இதனால் இன்றுடன் வானிலை சீரடையும் என யாழ்ப்பாணப்

23ஆம் பக்கம் பார்க்க

## 'டித்வா' புயலின் கோரத்தால் 159 பேர் உயிரிழப்பு

- 203 பேரைக் காணவில்லை
- சுமார் 8 இலட்சம் பேர் பாதிப்பு





*(கொழும்பு)*

டித்வா புயலின் கோரத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 159 ஆக அதிகரித்துள்ளது. 203 பேரை இதுவரை காணவில்லை என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

### எலிக்காய்ச்சலால்

## மட்டுவில் வடக்கில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

எலிக்காய்ச்சல் காரணமாக மட்டுவில் வடக்கில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

### வெள்ள அனர்த்தத்தினால்

## தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வெள்ள அனர்த்தத்தால் தொற்று நோய் ஏற்படும் அபாயம் ஏற்பட

23ஆம் பக்கம் பார்க்க

### நாயாறு பாலம் உடைந்தது

## முல்லைத்தீவு - கிளிநொச்சி போக்குவரத்து முற்றாகத் தடை



23ஆம் பக்கம் பார்க்க

## முதியோர் இல்லத்தில் 11 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெள்ளத்தில் மூழ்கி பன்னாலா முதியோர் இல்லத்தில் இருந்து 11 முதியோர்கள் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சியான கன மழை

23ஆம் பக்கம் பார்க்க

### சீரற்ற காலநிலையால்

## யாழ்ப்பாணத்தில் சுமார் 26 ஆயிரம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணத்தில் சுமார் 26 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுச் சனிக்கிழமை இரவு 7 மணி வரையில் 8 ஆயிரத்து 129 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 935 அங்கத்தவர்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன்

23ஆம் பக்கம் பார்க்க

பலமிகு
Handahana
ராசி சுப பலன்
உங்கள் மில்லியன் கனவுகளை நனவாக்குங்கள்
(C-349)
ரூ. 31 இலட்ச சுப்பர் பரிசு அதிர்ஷ்டசாலி
ஹந்தஹன 1276 ஆவது சீட்டிழுப்பிலே
ரூ.3,136,141.20
வென்ற சுப்பர் பரிசு வெற்றியாளர்

தேசிய லொத்தர்

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4453)
UK 11Kg - 1420/- France 11Kg - 2170/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2300/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

# யாழுக்கு 1.55 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்த நிலைவரம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் நாயகரிடம் இருந்து 1.55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்ட அவை பிரதேச செயலாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக விடுவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் 26,000.00, தென்மராட்சி 357,500.00, காரைநகர் 487,500.00, பருத்தித்துறை 130,000.00, வேலணை 100,750.00, சண்டிலிப்பாய் 52,000.00, கோப்பாய் 273,000.00, சங்கானை 19,500.00, ஊர்காவற்றுறை 110,500.00 ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கெனவே பிரதேச செயலர்களுக்கு 0.57 மில்லியன் ரூபாய் அனர்த்த தணிப்பு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் சுகாதார பாட ஆசிரியராகக் கடமையாற்றும் திரு த.சதீஸ் குமார் அவர்களின் அன்புத் தாயார்



திருமதி யோகராணி தர்மலிங்கம்

தோற்றம் 15.08.1954 — மறைவு 28.11.2025

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்
(1746)



## யா /நடேஸ்வரா கல்லூரி
காங்கேசன்துறை
125 ஆவது ஆண்டுவிழா

யா/காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் 125ஆவது ஆண்டினைச் சிறப்பிக்கும் முகமாக நினைவுச் சிறப்பு மலர் ஒன்றை சர்வதேச விழா ஒருங்கிணைப்புக் குழு ஒன்றிணைந்து கல்லூரியின் அனுமதியுடன் 2026ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடுப்பகுதியில் நடைபெற இருக்கும் ஆண்டு விழாவில் வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

இச்சிறப்பு மலரின் ஒரு பகுதியாக எமது கல்லூரியின் சாதனையாளர்கள் என்ற உள்ளடக்கத்திற்கு எமது கல்லூரியில் கல்வி கற்று சாதனை படைத்தவர்களின் பெயர் விபரங்கள் கோரப்படுகின்றன.

அந்த வகையில்

- நடேஸ்வரா கல்லூரியில் இறுதிவரை படித்து பல்கலைக்கழகம் சென்றவர்கள்
- விளையாட்டு மற்றும் கலை கலாசாரப் பிரிவுகளில் மாகாணம் மற்றும் தேசிய ரீதியில் சாதனை படைத்தவர்கள்
- கல்லூரியில் படித்து கலைஞர்களாக விளங்கியவர்கள்

போன்றவை அடங்கும்.

தரப்பட்ட தரவுகளுக்கு ஏற்புடையோர் எங்களோடு தொடர்பு கொண்டு உங்கள் விபரங்களை ஆதாரங்களுடன் தெரிவிக்கலாம். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

குறிப்பிட்ட விபரங்களை மார்கழி 15 2025க்கு (15.12.2025) முன்னர் அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு
E Mail :nadeswara125@gmai.com
Whatsapp: +44 7888 665298, +16478079357
+94 74 287 2626, +1 (647) 891-9326, +94 77 703 7564, +94 77 557 2545

சர்வதேச விழா ஒருங்கிணைப்புக் குழு
யா/ நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை
(178)



## பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் பராமரிப்பும் சிறிய வீட்டுப் பணிகளுக்கும் தங்கியிருந்து பணிசெய்யக்கூடிய பணிப்பெண் தேவை
உணவு,தங்குமிட வசதிகளுடன் ரூபா 45,000 தரப்படும்
(வேலைக்கு ஏற்ப மாறுபடலாம்)
உடல் ஆரோக்கியம் உள்ளவர்கள் விரும்பப்படும் இடம்: நெல்லியடி
075 484 71 71
(C-4454)



## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.
மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306
(C-4452)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தங்கமணி கனகரட்ணம்

மலர்வு 25.12.1950 — உதிர்வு 10.12.2024

உயிரே எம் தாயே!
எம்மை பிரிந்து நீர் சென்று
ஓர் ஆண்டு ஆச்சாம்

உம்மை தேடி அலையும் எம்
கண்கள் மட்டும் இன்னும்
தேடலை நிறுத்தவில்லை
எங்கள் கண்ணீரும் ஓயவில்லை

தாய் மடி தந்த ஆறுதலை
இனி யார் மடிதான் தரக்கூடும்
எவர் மடியும் வேண்டாம்
எங்களுக்கு உம் மடி
மட்டுமே வேண்டும்.

உன் நினைவலைகள் போதும்
தாயே அதில் தாய் மடியின்
வெப்பத்தை உணர்ந்திருப்போம்
அந்த வெப்பத்தின் சூட்டோடு
இன்னும்பல யுகங்கள்
உனைத்தேடிக் காத்திருப்போம்.

நீ தாயாகி உன் சேயான
என் மகளாகி வருவாய்
உன் தாலாட்டை
உனக்கே பாடி
உனைத் தூங்க வைப்பேன்.

எத்தனை காலங்கள் இங்கே
பறந்தோடி போனாலும்
உம் நினைவுகளால் என்றுமே
எம்மை விட்டு அகலாது அம்மா!

காலங்கள் கரைந்து
ஓர் ஆண்டு ஆச்சு
எங்கள் கண்ணீரும் இங்கே
கடலாகி போச்சு

தாய்ப் பறவை தந்த
தாலாட்டு பாட்டு
கண்ணீரில் கரைந்து
ஓர் ஆண்டு ஆச்சு

தாய் சொன்ன வார்த்தை
காதோரம் கேட்க
தாய் அணைத்த வெப்பம்
நெஞ்சோடு மணக்க
ஓர் ஆண்டும் எமக்கு
ஒரு யுகமாக போச்சே....

நீங்கா நினைவுகளுடன்...
குடும்பத்தினர்
(1747)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டித்வா’ புயலின் கோரத்தாண்டவம்; உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்

(கொழும்பு) ..................................

**நாட்டில் நிலவும் அதிதீவிர வானிலையால் இதுவரை 123 பேர் உயிரிழந்துள்ளதுடன் 130 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

தற்போதைய பாதிப்பு நிலவரங்களின் படி, நாட்டின் 25 மாவட்டங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் 102,877 குடும்பங்களைச் சேர்ந்த 373, 428 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தற்போது 488 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு, நிவாரணம் மற்றும் மதிப்பீட்டு பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், காணாமல் போனோரை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி)





# முழுமையான வெள்ளத்தில் மூழ்கிய ஹங்வெல்ல

(கொழும்பு)

களனி கங்கையை அண்டியிருக்கும் ஹங்வெல்ல பகுதி முற்றுமுழுதாக நீரில் மூழ்கியுள்ளது.

அதேசமயம் நாகலகம் வீதியும் முற்றுமுழுதாக வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்றது.

எனவே, களனி கங்கையின் இரு கரைகளிலும் இருக்கும் மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாகலம் வீதி வெள்ளத்தில் மூழ்கினால் கொழும்பில் பல இடங்களில் வெள்ள அபாயத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் வெள்ள அபாயம் இருக்கும் பகுதிகளில் இருக்கும் மக்கள் மீட்பு குழுவினரின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## தடைப்பட்டுள்ள

# தொலைத்தொடர்பு சேவைகளை விரைவாக வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக தடைப்பட்டுள்ள தொலைத்தொடர்பு சேவைகளை மீள வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக டிஜிற்றல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடுகண்ணாவ மற்றும் வத்தளை உள்ளிட்ட பகுதிகளில் முக்கிய ஃபைபர் கட்டமைப்பு சேதம் அடைந்துள்ளமையால் நாட்டின் பல பகுதிகளில் தொலைத்தொடர்பு சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொடரும் அடைமழை மற்றும் மின்சார தடை காரணமாக கட்டமைப்பில் ஏற்பட்ட சேதங்களை சீர்செய்ய முடியவில்லை.

இதன் காரணமாக பலர் தொலைபேசி மற்றும் இணையத்தை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அதனை சீர்செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அவசரமான பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் முதற்கட்டமாக திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய விரைவில் நாடு முழுவதும் தொலைத்தொடர்பு சேவைகள் வழமைக்கு திரும்பும் எனவும் அதுவரை பொது மக்கள் அமைதி காக்க வேண்டும் எனவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# அவசர நிவாரண பொருட்களுடன் இலங்கை வந்த இந்தியக் கப்பல்கள்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கவென இந்தியா அவசர மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைத்துள்ளது.




மனிதாபிமான நிவாரணப் பொருட்களுடன் இந்தியக் கடற்படையின் விக்ரான்ட், உதயகிரி ஆகிய கப்பல்கள் கொழும்பு வந்துள்ளன.

அவற்றில் 6.2 மெட்ரிக் தொன் உலருணவுப் பொருட்களும் உடனடியாக உண்ணக்கூடிய உணவுப் பொருட்களும் வந்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அதிகபட்ச மழைவீழ்ச்சி பதிவான இடங்கள்

(கொழும்பு)

நாட்டின் அதிகபட்ச மழைவீழ்ச்சி கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

**அதன்படி கண்டி, நில்லம்ப பகுதியில் நேற்று முன்தினம் 431 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.**

அத்துடன், கேகாலை மாவட்டத்தில் உள்ள டொத்தெலு ஓயா தோட்டத்தில் 277.8 மி.மீ. மழையும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொக்கணை பகுதியில் 274 மி.மீ. அளவில் மழையும் பதிவாகியுள்ளது. (நி)


8ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பன் ஐயாத்துரை

(கலிகை கந்தன் காந்தன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

அன்னை மடியில் 06.11.1952

ஆண்டவன் அடியில் 30.11.2017

திதி : கார்த்திகை மாதம் பூர்வபக்க ஏகாதசி

எட்டாண்டுகளாகிறது அப்பா
உங்களைப் பிரிந்து - ஏனோ
உம் நினைவுகளை மறந்துவிட
முடியவில்லை அப்பா!
பார் போற்ற எம்மை வாழச் செய்தீர்
இறைவன் திருவடியில் இளைப்பாறுங்கள் அப்பா!

தகவல்:
மகன் [illegible] (C.T.B)
குடும்பத்தினர்

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் நன்கொடை!



டித்வா புயல் பாதிப்புக்கு நன்கொடை வழங்க இலங்கை கிரிக்கெட் அணி தீர்மானித்துள்ளது.

வங்கக்கடலில் உருவான டித்வா புயலால் இலங்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் வீரர்கள் டிட்வா புயல் பாதிப்பிற்கு நன்கொடை வழங்க முன்வந்துள்ளனர்.

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் முத்தரப்பு தொடர் மூலம் பெறப்பட்ட சுற்றுப் பயணத்திற்கான பணம் மற்றும் போட்டிக் கட்டணங்களை நன்கொடையாக வழங்க இலங்கை கிரிக்கெட் அணி தீர்மானித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இலங்கை அணியின் பயிற்சியாளர் சனத் ஜெயசூரிய, "வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட சக இலங்கையர்களை நினைத்து வீரர்கள் மற்றும் துணை ஊழியர்கள் வருத்தமடைந்துள்ளனர். ஒரு அணியாக பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எங்கள் இதயங்கள் அஞ்சலி செலுத்துகின்றன. மேலும் பாகிஸ்தான் தொடரின் சுற்றுப்பயணப் பணத்தையும் போட்டிக் கட்டணத்தையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடையாக வழங்க முடிவு செய்துள்ளோம்.

நாங்கள் நாடு திரும்பியதும் இன்னும் அதிகமாக செய்ய உள்ளோம். இந்தக் கடினமான நேரத்தில் பாதுகாப்பாக இருங்கள், வழிகாட்டுதல்களைப் பின்பற்றுங்கள், ஒருவருக்கொருவர் கவனித்துக் கொள்ளுங்கள். அனைத்து இலங்கையர்களுடனும் ஒன்றாக நில்லுங்கள்" என தெரிவித்துள்ளார். (3)

## 3 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி; கைவிடப்பட்ட போட்டி

### நடுவர்கள் செயலால் அதிருப்தி

மகளிர் பிக்பாஷ் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் மற்றும் சிட்னி தண்டர் அணிகள் மோதின. போட்டியின் போது மழை பெய்ததால் ஆட்டம் 5 ஓவர் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டைக்கர்ஸ் அனி 5 ஓவரில் 46 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய தண்டர் அணி 2.5 ஓவரில் 43ஓட்டங்கள் எடுத்திருந்தது. இன்னும் 13 பந்தில் வெறும் 3 ஓட்டங்களே தேவைப்பட்டது.

அப்போது மழை குறுக்கிட்டது. இதனையடுத்து சிறிது நேரத்தில் மீண்டும் ஆட்டம் தொடங்கியது. ஆனால் ஆட்டத்தை நடுவர்கள் நிறுத்தி வைத்தனர்.

களத்தில் இருந்த இரு நடுவர்களும் போட்டி கைவிடப்பட்டதாக அறிவித்தனர்.

இதனைச் சற்றும் எதிர் பாரத தண்டர் அணி வீராங் கனைகள் கோபத்துடன் மைதா னத்தில் இருந்து வெளியேறினர். மேலும் வெளியில் இருந்த மற்ற வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் என பலரும் இந்த முடிவால் அதிர்ச்சியடைந்தனர். (3)



## இலங்கை மகளிர் அணி இந்தியாவிற்கு விஜயம்



இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணி அடுத்த டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் வாரியம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இதன்படி இந்தியா-இலங்கை பெண்கள் அணிகள் இடையிலான முதலாவது மற்றும் இரண்டாவது போட்டி விசாகப்பட்டினத்திலும், 3 ஆவது , 4 ஆவது , 5 ஆவது மற்றும் கடைசி போட்டி திருவனந்தபுரத்திலும் நடைபெறவுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கை பெண்கள் அணி 20 ஓவர் தொடரில் விளையாட இந்தியாவுக்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

50 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்ற பிறகு இந்திய பெண்கள் அணி பங்கேற்கும் முதல் போட்டி இதுவாகும். ஏற்கனவே இந்த சமயத்தில் நடக்க இருந்த பங்களாதேஷ் பெண்கள் அணியின் பயணம் காலவரையின்றி தள்ளிவைக்கப்பட்டதால், அதற்கு மாற்றாக இலங்கைக்கு எதிரான தொடர் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (3)

## 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ண கால்பந்து; சம்பியனானது போர்த்துக்கல்




17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான (A17) 20 ஆவது உலகக் கிண்ண கால்பந்து போட்டி கட்டார் தலைநகர் டோஹாவில் நடைபெற்றது.

48 அணிகள் பங்கேற்ற இந்த கால்பந்து திருவிழாவில் நேற்று முன்தினம் இரவு நடந்த இறுதி ஆட்டத்தில் போர்த்துகல்-ஆஸ்திரியா அணிகள் மோதின.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரியாவை வீழ்த்தி முதல் முறையாக உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. போர்த்துக்கல் வீரர் அனிசியோ காப்ரல் 32 ஆவது நிமிடத்தில் அடித்த கோல் வெற்றியை தீர்மானிப்பதாக அமைந்தது. அவர் இந்த தொடரில் அடித்த 7 ஆவது கோல் இதுவாகும்.

முன்னதாக நடந்த 3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இத்தாலி அணி பெனால்டி ஷூட்-அவுட்டில் 4-2 என்ற கோல் கணக்கில் 4 முறை சம்பியனான பிரேசிலுக்கு அதிர்ச்சி அளித்து 3 ஆவது இடத்தை தனதாக்கியது.

அடுத்த உலகக் கிண்ண போட்டி அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் இதே கட்டாரில் நடைபெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் - 2026

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2025 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2025 தொடக்கம் 31.12.2025 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2026"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு. கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். **அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டாது.**

• மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021-432 3440 / 021-4323447 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.

**கௌரவ செயலாளர்,**
**மதியாபரணம் அம்பிகைபாகன்,**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

முதலாவது அட்டவணை - (படிவம் 01)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2026 ஆம் ஆண்டு

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ..............................
2. பிறந்தநாள் :- ..............................
3. இந்துசமயத்தவரா? :- ..............................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?:-.............
5. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- ..............................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற்கட்டளையின் விபரம்:-

காசுக்கட்டளை/ த.க. இல | அலுவலகமும் வழங்கிய நாளும் | தொகை

.............................. .............................. ............

8. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.

9. இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?

10. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு. வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்

..............................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தை புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .......... ஆம்ஆண்டு ............மாதம் ............நாளன்று .......... என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்

..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு** - விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**2025.12.31** ஆம் திகதி மாலை **5.00** மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது அட்டவணை - (படிவம் 02)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் 2026 ஆம் ஆண்டு

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

.............................. ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன் ...................... அஞ்சலகத்தால் ...........ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட .......... இலக்கங்கொண்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :- ..............................
முகவரி :- ..............................
எனக்குள்ள உபயம் :- ..............................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :- ..............................

..............................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம், எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ............ஆம் ஆண்டு ..............மாதம் .................. நாளன்று .......... என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்

..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு** - விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு. இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2025.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(C-4448)

# JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING - 2026 NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Monday, 12th January 2026 at 11.30 am. at the **Auditorium, Clinical Teaching and Research Block (CTRB) Faculty of Medicine, University of Jaffna.** for the following purposes;

1. To receive and consider the annual report of the committee of management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2025 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for the year 2026.
4. To appoint the auditors of the association and to authorize the committee of management to determine their remuneration.

**By order of the committee of management,**

**Honorary Secretary,**
**30th November 2025.**

(6032)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தத்தினால் 2397 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 2ஆயிரத்து 397 குடும்பங்களை சேர்ந்த 7ஆயிரத்து 513 அங்கத்தவர்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.**

இதேவேளை தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுகளில் 130 குடும் பங்களைச் சேர்ந்த 390 அங் கத்தவர்கள் 12 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக் கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செய லாளர்களினால் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆயிரத்து 580 குடும் பங்களை சேர்ந்த 4ஆயிரத்து 993 அங்கத்தவர்கள் நண்பர் கள் மற்றும் உறவினர் வீடு களில் தங்கவைக்கப்பட்டுள் ளனர். இதேவேளை 2 வீடு முழுமையாக சேதமடைந்துள் ளதுடன் 108 வீடுகள் பகுதி யளவில் சேதமடைந்துள்ளன.



மேலும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் புங்குடு தீவிலிருந்து குறிக்கட்டுவான் வரையான தரைப்போக்கு வரத்து தடைப்பட்டுள்ளதுடன் குறிக்கட்டுவானிலிருந்தான சகல படகு சேவைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நெடுந்தீவு, நயினாதீவு, எழுவை தீவு, அனலை தீவிற்கான படகு சேவையும் இடைநிறுத்தப்பட் டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டு தங்களது வீடுகளிலிருந்து வெளியேறும் மக்கள் தங்குவ தற்கான பாதுகாப்பு நிலை யங்கள் பிரதேச செயலா ளர் பிரிவு ரீதியாக அமைக் கப்பட்டுள் ளன. இது தொடர்பில் பாதிக் கப்பட்ட பொதுமக்கள் கிராம சேவையாளரின், பிர தேச செயலாளரின் உதவி யினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்ற னர். (8-33)

## வீட்டின் மீது வீழ்ந்த மரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி வீதி 1ஆம் ஒழுங்கையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மரம் ஒன்று வீட்டின் மீது சரிந்து வீழ்ந்துள்ளது. இந் நிலையில் இரா ணுவத்தினர் மரத்தினை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த னர். (8-33)

## பூட்டிய நிலையில் மலசலகூடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நெல்லியடி நகரில் அமைந்துள்ள மல சலகூடம் வேலைகள் முடிந்தும் பூட்டிய நிலை யிலேயே காணப்படுகின் றது.

இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங் களிற்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-60)



## கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தில் 2500 பேர் பாதிப்பு



(தருமபுரம்)

தற்பொழுது நாட்டில் ஏற்பட் டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி மாவட் டத்தின் பல பகுதிகள் வெள்ளத் தில் தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் போக்குவரத்தும் முற்றாக பாதிக் கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட் பட்ட பெரிய குளம் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் கண்டாவளை பிரதேச செயலர் இணைந்து பெரியகுளம் பகுதியில் இருந்து பாதுகாப் பான இடங்களுக்குப் படகு கள் மூலம் அவர்களை அனுப்பி வைக்கும் நடவ டிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அனர் த்தம் காரணமாக நேரடியாக வெள்ளப் பாதிப்புகளை 2500 இற்கும் மேற்பட்டவர்கள் எதிர் நோக்கியுள்ளனர்.

அத்துடன் பெருமளவா னோர் இடைத்தங்கல் முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள் ளனர். அத்துடன் இவர்களுக் கான சமைத்த உணவை வழங் கும் நடவடிக்கைகள் பிரதேச செயலங்கள் இராணு வத்தினர் முன்னெடுத்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (8-318)

## சாவகச்சேரியில் வெள்ள அனர்த்தம் தவிசாளர்குழு களவிஜயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற வெள்ள அனர்த்த நிலைமைகளை நகரசபைத் தவிசாளர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுடைய பிரதிநிதிகள் நேற்று சனிக் கிழமை நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இந்நிலையில் கோவிற் குடியிருப்பு கிராமத்தில் அண்மையில் தூர்வாரப்பட்ட உப்புக்கேணிக் குள சூழலை நகரசபைத் தவிசாளர், செய லாளர் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழு வினர் பார்வையிட்டிருந்தனர்.

மேற்படி குளமானது நிரம்பி அப்பகுதியில் வெள்ள அனர் த்தம் ஏற்பட்டுள்ள போதிலும் மேலதிக நீரைக் கடலுக்கு கடத் துவதற்கான இயற்கையான வழி சட்டவிரோத கட்டடங் களால் தடைப்பட்டுள்ளது.

இந் நிலையில் நகரசபை மற்றும் பிரதேச செயலகம் ஆகி யன மேலதிக நீரைக் கடத்துவ தற்கான மாற்று வழிமுறை களை தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-30)



## வேகமாகப் பரவும் பார்த்தீனியம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வேகமாகப் பரவி வருகின்ற பார்த்தீனிய விஷச் செடிப் பர வலை கட்டுப்படுத்த நடவடி க்கை எடுக்க வேண்டும் என சபை உறுப்பினர் பால மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டி யிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பல இடங்க ளிலும் பார்த்தீனியச் செடி மிக வேகமாக பரவி வருகின்றது.

இந்தச் செடி பூக்கும் வரை நாம் அதனை அழிக்காது விட் டால் அதனூடாக இலட்சக் கணக்கான செடிகள் பரவி அழிவை ஏற்படுத்தும்.

சாவகச்சேரியில் பல தனி யார் காணிகளில் பார்த்தீனிய பரவல் காணப்படுகின்றது.

எனவே மேற்படி காணி உரிமையாளர்களுக்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கி விஷச் செடியை அழி க்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செடியை அழிக்கத் தவறும் பட்சத்தில் சட்ட நட வடிக்கைக்கு அவர்களை உட்படுத்த சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். (8- 30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவீரர் நாள் பேரெழுச்சி கண்ட தமிழர் தாயகம்

ஒரு இனத்தின் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுமானால் நிச்சயம் அந்த இனம் தன் மீது திணிக்கப்படும் அடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழும். அதுவே புரட்சி என்போம்.

ஆம், இலங்கைத் திருநாட்டிற்கு காலணித்துவ ஆட்சிப் பிடியிலிருந்து விடுதலை கிடைத்ததும் இனி இந்த நாடு ஓகோ என வளரப் போகிறது.

உலக வரைபடத்தில் இலங்கை உச்சம் பெறப்போகிறது என நாட்டின் மக்கள் அனைவரும் எண்ணியிருந்தனராயினும் அது நடக்கவில்லை என்பது வேதனையான விடயம்.

காலணித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை அடைந்ததும் இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தனரா எனின் இல்லை என்பதே உண்மை.



எமது வளங்களை காலணித்துவ ஆட்சியாளர்கள் சூறையாடுகின்றனர் எனக் கொதித்த நாம் அவர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்ததும் எம்மில் பெரும்பான்மை, சிறுபான்மை என பிரிந்து நிற்கத் தலைப்பட்டோம்.

பெரும்பான்மையினர் இந்த நாடு எமக்கு மட்டும் சொந்தம் என்ற எண்ணத்தை வளர்த்தனர்.

இதுவே இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் முரண்பாடு உருவாகக் காரணமானது.

அரசியல் தளத்தில் தமது இருப்பை நிலைநிறுத்துவதற்காக பெரும்பான்மை அரசியல்வாதிகள் ஊர் ஊராகச்சென்று இனவாதத்தை விதைத்தனர்.

சிறுபான்மைத் தமிழினத்தின் பூர்வீகங்களை கபளீகரம் செய்தனர். அவர்களின் தொன்மைகளையெல்லாம் திசை திருப்பி தம்முடன் இணைத்தனர்.

நாட்டின் ஆட்சிமொழி சிங்களம் என்றும் பௌத்த மதம் அரச மதம் என்றும் பிரகடனப்படுத்தினார்.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் பௌத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஏனைய மதங்களைப் புறந்தள்ளினர்.

இவ்வாறான திசை திருப்பலுக்குள் அடைபட்ட தமிழினத்தின் அறவழிப் போராட்டம் எடுபடாமல் போக, தமிழ் இளைஞர்கள் இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதப் போரைத் தொடங்கினர்.

தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை புரிந்துகொள்ளாத பேரினவாத அரசு அந்தப் போராட்டத்தை சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமாக திசை திருப்பி விட சிங்கள மக்கள் தமிழ் மக்கள் மீது தீராத வெறுப்பைக் கொட்டத் தொடங்கினார்.

அபிமன்யு



அதன் விளைவு பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காவு கொண்ட யுத்தம் 2009இல் பயங்கரவாதத்தை ஒழித்ததான கோசத்துடன் நிறைவுக்கு வந்தது.

போர் நிறைவுற்றது. பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டது என இலங்கை அரசு சர்வதேசத்திற்கு மார்தட்டினதாயினும் தொடர்ந்து தமிழினத்தை ஒடுக்கும் செயலிலும் அவர்கள் பூர்வீகங்களை ஆக்கிரமிக்கும் செயலிலும் அவர்கள் நிலங்களை கபளீகரம் செய்வதிலும் தீவிரம் காட்டினரே தவிர, தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட காட்டுமிராண்டித் தனத்துக்கு மருந்திட முற்படவில்லை.

இங்குதான் காலம் தன் கடமையைச் சரியாகச் செய்து கொண்டது. ஆம், யாரை சிங்கள மக்கள் தமது போர் வீரன் எனப் புகழ்ந்தனரோ அவரைத் தூக்கி எறிந்தனர். அவரே இந்த நாட்டின் அவல நிலைக்குக் காரணம் என தூற்றிக் கொண்டனர்.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் இழந்த தமது பிள்ளைகளை நினைவுகூற அனுமதிக்காமல் இரும்புக்கரம் கொண்டு அடக்கி வைத்தவர்களின் கைவிலங்குகள் இப்போது உடைக்கப்பட்டிருக்கின்றது.

மண் மீட்புப் போரில் தமது இளமையைத் துறந்து ஒப்பற்ற பல தியாகங்களைச் செய்து புதைகுழியில் துயிலும் மாவீரப் பெருந்தகைகளை நினைவுகூரும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த 27 ஆம் திகதி மாவீரர் தினம் வரலாறு காணாத எழுச்சியை எட்டியிருக்கிறது எனின் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதுமில்லை.

அந்தளவிற்கு தமிழர் தேசம் உணர்வுபூர்வம் கொண்டிருந்தது.

அடடா! எம் மக்களின் மனங்களின் மாவீரச் செல்வங்கள் என்றும் உயிர்ப்புடன் வாழ்கின்றனர் என்பதை இம்முறை எழுச்சி பேரெழுச்சியாய் நினைவூட்டியிருக்கிறது. தமிழ் தாயகத்தின் ஈழ மண் மீட்புக்காய் மரணித்த வீரர்கள் வீட்டுக்கொருவர் நிச்சயம் இருப்பர்.

அந்தவகையில் வீதிக்கு வீதி, தெருவுக்குத்தெரு, சிறு ஒழுங்கைகள், கிராம சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள் இவற்றைத் தாண்டி வடக்கு கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் என அனைத்தும் உணர்வுபூர்வமாய்த் திகழ்ந்ததைப் பார்க்கும் போது நிச்சயம் மாவீரர் மனங்கள் குளிர்ந்திருக்கும்.

27ஆம் திகதி 6.05 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் மக்கள் அலை அலையாய் வந்து அகவிளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு மக்களை வரச்சொல்லி யாரும் அழைப்பு விடுக்கவில்லை.

எவரும் தலைமை தாங்கி அஞ்சலி நிகழ்வுகளை நடத்தவில்லை.

ஆனாலும் மக்கள் மழை வெள்ளம், பேரனர்த்தத்தைக்கூட கருத்தில் எடுக்காது, அங்குகூடி மரணித்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர் எனின், தமிழ் மக்களிடையே ஒற்றுமையில்லை என்று எவ்வாறு சொல்லிவிட முடியும்?

இங்குதான் எம் தமிழ்த் தலைவர்களின் கபட நாடகங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றனர் தமிழ் மக்கள்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் தெற்கின் அரசியல் கட்சிக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தபோது, தமிழரின் ஒற்றுமை அவ்வளவுதான்.

இனி தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்த முடியாது எனப் பேசிக் கொண்டனர் எம் தமிழ்த் அரசியல் தலைவர்கள்.

தமிழ் மக்களோ மாவீரர் விடயத்தில் ஒன்று திரண்டதனூடாக எம்மை நம்ப வைத்துக் கழுத்தறுத்த உங்களை எதிர்க்கிறோம்.

ஆயினும் எங்களுக்காக, எங்கள் வாழ்வுக்காக, எங்கள் நிம்மதிக்காக, எங்கள் மண் மீட்புக்காக போரிட்டு மண்ணோடு மண்ணான மாவீரரை எம்மனங்களிலிருந்து பிரிக்க முடியாது என்ற பெரும் செய்தியைக் கொடுத்திருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் - தனுஷ்கோடி தரைப்பாலம் சாத்தியமா?

**பாக்கு நீரிணைதான் இந்தியாவின் தொடர் நிலப்பரப்பிலிருந்து இலங்கையைப் பிரித்து ஒரு தீவாக்கியது. இதன் மூலம் பாக்கு நீரிணைதான் இலங்கையை ஒரு நாடாக்கியது. அதுதான் இலங்கையை ஒரு தனி அரசாக்கியது. இந்த வகையில் பாக்கு நீரிணை சிங்கள பௌத்தத்துக்கு ஒரு வரம்.**

இந்தியாவுக்கு பாக்கு நீரிணை நிரந்தர எதிரி. சிங்கள பௌத்த அரசுக்கு பாக்கு நீரிணை நிரந்தர நண்பன், அது வரமும் சாபமும் கலந்த நண்பன் அல்லது அமிர்தமும் நஞ்சும் நிறைந்த நண்பன் ஈழத் தமிழருக்கு பாக்கு நீரிணை அரை நண்பன்.

அமிர்தம் என்பது தேவர்கள் அருந்துவதாக கூறப்படும் ஒரு புராண உணவு. அமுதம் என்பது ஈயத்தை தங்கமாக மாற்றும் அழியாமையைக் தரும் ஒரு கற்பனைத் திரவம். இங்கு நஞ்சை கழைந்து அமிர்தத்தை கடைந்தெடுக்கும் அரசியல் வித்தை சிங்களத் தலைவர்களுக்கு தெரியும்.

இந்திய அரசுக்கு பாக்கு நீரிணை எப்போதும் அதன் முழு எதிரியாய் உள்ளது. ஆதலாற்தான் தனுஷ்கோடி- தலைமன்னார் தரைப் பாலத்தை அமைப்பதன் வாயிலாக அந்தப் பாக்கு நீரிணையை தனது நண்பனாக்க இந்தியா முயல் கிறது. சிங்களவிற்கு வெள்ளிடை மலையென ஒன்று தெரியும்.

அதாவது அந்தப் பாக்கு நீரிணைதான் இந்தியாவின் தொடர் நிலப்பரப்பிலிருந்து இலங்கையைப் பிரித்து ஒரு தீவாக்கியது. இதன் மூலம் பாக்கு நீரினைதான் இலங்கையை ஒரு நாடாக்கியது. அதுதான் இலங்கையை ஒரு தனி அரசாக்கியது. இந்த வகையில் பாக்கு நீரினை சிங்கள பௌத்தத்துக்கு ஒரு வரம்.

பௌத்தம் பிறந்த இந்தியாவிலேயே இந்து மதப் பிரிவுகளினால் பௌத்தம் அழிக்கப்பட்ட போதிலும் பௌத்தம் புகுந்த இலங்கைத் தீவில் அந்தப் பாக்கு நீரிணையால் அந்த பௌத்தமும் பௌத்த அரசும் பாதுகாக்கப்படுகிறது.

ஒருவேளை கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இந்திய பேரரச ஆதிக்க விருத்தியின் ஒரு வடிவமாக பௌத்தம் இலங்கைக்கு சமாதானபூர்வமாக கொண்டு வரப்பட்ட போதிலும் அனுராதபுரம் மன்னன் தீசன் மௌரியப் பேரரசர் அசோகச் சக்கரவர்த்தியின் கட்டளைப்படி மீள் முடி தரிக்கப்பட்டார் என்று மகாவம்சம் கூறுகிறது.

மேலும் சக்கரவர்த்தி அசோகரின் பட்டப்பெயரான "தேவநம்பிய" என்பது தீசனுக்கான முடிக்குரிய பேராக்கப்பட்டு தீசன் தேவநம்பிய தீசன் என அரச பட்டப் பெயர் சூட்டப்பட்டார். இது இந்திய பேரரச ஆதிக்கப் படர்ச்சியின் தெளிவான அரசியல் வடிவம்.

ஆயினும் சிங்கள அரச பௌத்த சமூக உருவாக்கமானது இலங்கை அநுராதபுரத்தில் தோன்றி வளர்ந்து வந்த ஒரு அரச சமூக வளர்ச்சியின் கழுத்தில் ஒரு கூரிய இந்திய ஆதிக்க வாளாக பௌத்தம் இலங்கையை அணுகிய போது அநுராதபுரத்தில் முகிழ்ந்து எழுந்து வந்த உயர் அரச குழாம் கழுத்துக்கு ஓங்கப்பட்ட அந்த வாளை தமது தலைக்கும் நெஞ்சுக்குமான கவசமாக மாற்றிக் கொண்டனர். இது ஒரு பொழுதில் நிகழ்ந்தது அல்ல.




### பௌத்த அரச பண்பாடு

தொடர் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் இவ்வாறு முகிழ்ந்தெழுந்து. இந்நிலையில் சிங்கள அரசு, பௌத்த மகா சங்க நிறுவனம், பொதுமக்கள் என அனைவரையும் ஒன்று திரட்டிய ஒரு வடிவமாய் சிங்கள பௌத்த அரச பண்பாட்டு வாழ்வு முதிர்ச்சி அடைந்தது. அரசை பௌத்த நிறுவனத்தினாலும் மக்களாலும் என ஒன்றுடன் ஒன்றாய் மூன்றையும் திரட்டி எடுத்தனர்.

சிங்கள பௌத்த இலங்கை அரசு என்பதன் தெளிவான திரட்சி பெற்ற வடிவம். மேற்படி மூன்றுக்கும் அச்சாணியாயும் அரணாயும் விளங்குவது பாக்கு நீரிணையாகும். இந்தியாவிலிருந்து இலங்கையை பிரித்து பாதுகாப்பு அளிக்கும் இந்த பாக்கு நீரிணை என்ற அரணை எப்படி ஒரு பாலத்தின் மூலம் இந்தியாவோடு இணைக்கத் தயாராகுவார்கள்.

ஆனால் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு பாக்கு நீரிணை என்ற மந்திர வித்தை இன்னும் தெரிந்து கொள்ளப்பட்டதாய் இல்லை. ஒருவேளை அவர்கள் அதைத் தெரிந்து கொள்ள விரும்புவதும் இல்லை, அப்படி ஒரு பொருள் இருப்பதாகத் திரும்பி பார்ப்பதும் இல்லை.

வானத்து வெள்ளியை அண்ணாந்து பார்த்துக் கொண்டு, பாம்பு புதருக்குள் காலூன்றி நடக்கும் நிலையிற்தான் தமிழ் அரசியல் தலைவர்களின் அரசியல் போக்கு உண்டு. பாலம் கட்டுவது தொடர்பாக புத்திசாலித்தனமான சிங்கள தலைவனை கேட்டால் அதற்கு "ஆம்" என்று பதில் சொல்வார், ஆனால் பாலம் கட்டமாட்டார். ஆம் என்று சொல்வதற்கு காரணம் தூணேறிய சிங்கமாக ஒருபுறமும் காராம் பசுவாக மறுபுறமும் உள்ள இந்தியாவின் முன் அதன் கவனத்தை ஈர்ந்து ஆடிப்பாடிப் பால் கறப்பதற்கு.

அதேவேளை பாலம் கட்டுவது பற்றி ஒரு அடிமட்ட சாதாரண சிங்கள மகனிடம் கேட்டால் கட்ட வேண்டாம் என்று சொல்லுவான் கட்டவிடவும் விட மாட்டான். சிங்கள புத்திசாலியின் "ஆம்" என்ற தந்திரம் துணேறிய சிங்கத்தை திசை திருப்பவும் உதவும் காராம் பசுவில் பால் கறக்கவும் உதவும்.

கடவுளாகக் கொள்ளப்படும் இராமபிரானின் ஆணைப்படி இலங்கை மீது படையெடுப்பதற்காக தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே ஹனுமானால் கட்டப்பட்டது இராமர் பாலம் என்கிறது இதிகாசம். "சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம்" என்றார் இந்திய தேசிய கவிஞர் பாரதியார். எனவே மத நம்பிக்கையின் படியும் இலங்கைக்கு ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

### இலங்கைக்கு ஒரு பாலம்

இந்திய தேசிய சிந்தனையின்படியும் இலங்கைக்கு ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று இந்திய தேசியம் எதிர்பார்க்கிறது. முழு இந்தியாவையும் கூடவே அத்துடன் இலங்கைத் தீவையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதே "சிந்து நதியின் மிசை நிலவினிலே ..." என்று தொடங்கும் பாரதியாரின் கவிதை ஆகும்.

சிங்கள பௌத்த அரசையும் சிங்கள பௌத்த மதத்தையும் பொறுத்தவரை பாக்குநீரிணை சிங்கள பௌத்த அரசுக்கு ஓர் அரணாகும். பாக்கு நீரிணைதான் புவியியல் ரீதியாக இந்தியாவுடன் இருந்துவந்த நிலத்தொடரைத் துண்டித்து இலங்கையை ஒரு தீவாயும், ஒரு நாடாயும், ஒரு தனியரசாயும் ஆக்கியது.

பௌத்தம் பிறந்த இந்தியாவில் அது இந்து மதப் பிரிவுகளால் இந்தியாவை விட்டு துரத்தப்பட்ட போது இலங்கை என்ற தீவிற்தான் அது தரித்துப் பாதுகாக்கப்பட கூடியதாக இருந்தது. அந்த வகையில் பாக்கு நீரிணை சிங்கள பௌத்தர்களுக்கு ஒரு வரமும் கொடையுமாகும்.

அதேவேளை பாக்கு நீரிணையின் ஒரு புறத்தில் ஈழத் தமிழரும் அதன் மறுபுறத்தில் தமிழகத் தமிழரும் வாழ்ந்து வரும் நிலையில் ஈழத்தமிழருக்கும் தமிழக தமிழருக்கும் இடையேயான உறவை சிங்கள பௌத்த அரசு கசப்புடன் பார்த்து வருவதுடன் அத்தகைய கசப்பினதும் பயத்தினதும் பின்னணியில் சிங்கள பௌத்த அரசு ஈழத்தமிழரை இனப்படுகொலை செய்து வருகின்றது என்பதும் கண்கூடு.

மேலும் ஈழத்தமிழரை இந்திய ஆதிக்க படர்ச்சியின் கருவிகளாகவும் இந்திய அரசின் ஆதிக்க படர்ச்சிக்கான ஓர் ஏதுவாகவும் ஈழத் தமிழரை சிங்கள அறிஞர்களும், வரலாற்றாளர்களும், தலைவர்களும், பௌத்த மத நிறுவனமும் ஆழமாக நம்பியும், கருதியும் வருகின்றனர். கூடவே கி.மு 3 ஆம் நூற் றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பௌத்தமும் இந்திய பேரரச ஆதிக்கப் படர்ச்சியின் ஒரு பகுதியாகவே நிகழ்ந்ததைச் சிங்கள பௌத்த தரப்பினர் உணரத் தவறவில்லை.

இந்த வகையில் ஒட்டுமொத்த இந்திய ஆதிக்க பரவலை பெரிதும் தடுப்பதற்கு இயற்கையாக காணப்படும் பாக்கு நீரிணையை ஒரு வரமாகவே கருதும் சிங்கள பௌத்த தரப்பினர் செயற்கையாக 23 கிலோமீற்றர் தொலைவுக்கு ஒரு தரை வழிப் பாலம் அமைக்கப்படுவதை ஒரு போதும் விரும்ப மாட்டார்கள்.

ரி.திபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**தாய்மண்ணின் விடுதலைக்காக தம் உயிர்களை தியாகம் செய்த வீரமறவர்களுக்கு அமரன் திரைப்படம் போல திரைப்படம் உருவாக்கலாமா?**

*விண்நிலா-கிளிநொச்சி*

அமரன் ஒரு வீரன். அதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை. ஆயினும் அமரனைப் போல ஆயிரம் மடங்கு தியாகங்களைச் செய்த ஆயிரமாயிரம் வீரமறவர்கள் வாழ்ந்து மடிந்திருக் கிறார்கள் எம் தேசத்தில்.

அந்த வீரமறவர்களின் காவியத்தை படமாக் கினால் ஆயிரம் பகுதிகள் எடுத்தாலும் அவர்களின் ஒப்பற்ற வீரத்தையும் தியாகத்தையும் கூறி விட முடியாது.

**நான் 1947 ஆம் ஆண்டு கார்த்திகை 24 ஆம் திகதி பிறந்தேன். 2026 இல் என் பலன் எப்படி இருக்கும் என கூறுங்கள்?**

*தவராஜன்-கொற்றாவத்தை*

தவராஜன் நீங்கள் இந்த உலகை ஆளப் பிறந்த மனிதன். உங்கள் வார்த்தையை இந்த உலகமே கேட்கும்.

நீங்கள் எதைச் சொன்னாலும் அது பெரும் கருத்தாளம் மிக்கதாகவே இருக்கும்.

எல்லோருக்கும் உடம்பில் ஆங்காங்கே தான் மச்சம் இருக்கும். உங்கள் உடம்பே ஒரு மச்சம் தான். இப்போது சுக்கிர பார்வை உங்கள் பக்கம் நிற்பதால் இரவில் தூங்கும் போது அவதானம் தேவை.

ஏனென்றால் கடவுள், கூரையைப் பிய்த்துக் கொடுக்க அது உங்கள் தலைமேல் விழுந்திடு மல்லவா?

இப்படியெல்லாம் சொல்ல எனக்கு ஆசை தான். ஆனாலும் என்ன செய்ய எனக்குத்தான் சாத்திரம் தெரியாதே.



ததாயகம், தமிழ் தேசியம் என ஊரை ஏமாற்றுபவர்களுக்கு முடிவே இல்லையா?

**நம்மை நாம் ஆளக் கேட்டதை பிரிவினை வாதம் எனக் கூறுவது சரியானதா?**

*சுதன்-குப்பிழான்*

எமது போராட்டம் எப்படிப்பட்டது. நாம் ஏன் போராடத் தலைப்பட்டோம் என்பது தெரியாமல் எமது போராட்டத்தை பிரிவினை வாதம் என்று வகைப்படுத்துவது ஒரு நாளும் ஏற்புடையதல்ல.

ஒன்றாய் இருப்பதற்கு விருப்பப்பட்டவர்கள் தான் நாம். ஆயினும் ஒன்றாய் இருக்கவிடாமல் பிரிவினை செய்தது யார் என்ற உண்மையை, எமது கோரிக்கைகளை பிரிவினை வாதம் என்று கூறுபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆயினும் எல்லாம் கையை மீறிப்போய் விட்டது. இனி எமதினத்தினால் எதையும் சாதித்து விட முடியாது

**பட்டதாரிகளின் எதிர்கால நிலை என்ன வியாசரே?**

*கோ.கஜீபன்-கோண்டாவில்*

பட்டம் இப்போது பெயருக்கு பின் போடும் பட்டன் ஆகிவிட்டதை உணராமல் அரச வேலை கிடைக்கும் என்று நம்பி நம்பி அரைக் கிழடு ஆகாமல், பட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும் என்று அதைத் தூக்கிப் போட்டுவிட்டு தரமான ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து அதில் தேர்ச்சி பெற்று, உழைத்து அதில் வெற்றி பெற்று ஊரும் உலகும் உங்களை வாழ்த்தும்படி வாழ்ந்தால் அதுவல்லவா வரம்.

இதுவென்னடா வென்றால், முதல் நியமனம் வெளிமாவட்டமென்று அதிகாலை 4.30 இற்கு கண்விழித்து அரக்கப் பறக்க குளிச்சு வெளிக் கிட்டு, மோட்டார் சைக்கிளை முறுக்கு முறுக் கெண்டு முறுக்கி கைதடிச் சந்தியில் பஸ் பிடிச்சு அங்க போய்ச்சேர அரை நாள் ஆகிடுமெல்லோ.

ஆறு வருட அந்த வாழ்வை கொஞ்சம் நினைச்சுப் பாரும். அலைச்சல்: இந்த அரச வேலை தேவைதானா?

**சொப்பின்பாக் இலவசத்தைத் தடுத்த தனால் சுற்றுச் சூழல் மாசுபாடு தடுக்கப் படுமல்லவா வியாசரே?**

*சி.சுரேசன்-பத்தமேனி*

சில விடயங்கள் பேசுவதற்கு நன்றாக இருக்கும். நடைமுறைக்கு எடுபடாது. ஆயினும் பொலித்தீன் பாவனை என்பது மனித ஆரோக்கியத்தை பெரிதும் பாதிக்கின்றதுடன் அது மண் வளத்தையும் பாதிக்கிறது.

ஆகையால் அதைத் தடை செய்வது அல்லது குறைப்பது காலத்தின் தேவை. ஆயினும் அதற்கு எம்மிடம் மாற்றீடு இருக்க வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை எந்தக் கடைகளிலும் வாழை இலை இருக்கவே செய்யும்.

ஆயினும் இங்கு ஒன்றிரண்டு கடைகளைத் தவிர்த்து வாழை இலை பாவிப்பவர்கள் இல்லை.

அங்காடியில் பொருள் வாங்கும் போது பொலித்தீன் பை வேண்டுமா என்று கேட்டு காசாளர் சிரிக்கும் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

**தாயகம், தமிழ் தேசியம் என ஊரை ஏமாற்றுபவர்களுக்கு முடிவே இல்லையா?**

*மூன்-கிளிநொச்சி*

முடிவு கட்ட வேண்டியவர்கள் மூச்சிரைத்ததால் விளக்குமாறுகளும் தும்புத்தடிகளும் வீரம் பேசுகினம்.

காலம் பதில் சொல்லுமென்று காத்திருக்க நம் கண்முன்னே வீணர் கூட்டம் வெறியாட்டம் ஆடிடவே, ஈழக் கனவுக்காய் ஊன் உறக்கம் மறந்து உழைத்த உத்தமர் ஒரு தொகையினர் உயிர் மாய்க்க மறு தொகையினர் மௌனமாகிட, வருகிறவர்-போகிறவரெல்லாம் வாயால் வாள் வீசுகிறார்கள்

மதில் மேல் பூனையாய் மந்திக் கொண்டிருந்தவர்கள் மஞ்சள் சிவப்பு கொடி கட்டி மரகத மேனியர் இசை மீட்டி மானம் ஒன்றே வாழ்வென்று மைக் பிடித்துப் பேசுகினம்.

இஞ்ச, இனி அவர்கள் திரும்ப வந்தால் எத்தினை பேர் அந்த லிஸ்ரில இருப்பினமோ இறைவனுக்கே வெளிச்சமப்பா!

**பாலியல் கல்வி பாடசாலைகளில் கற்பிப்பது உகந்ததா வியாசரே?**

*விஜயகுமார்-யாழ்ப்பாணம்*

பாலியல் கல்வி பாடசாலைகளுக்கு தேவை என்றும் தேவையில்லை என்றும் கூறும் கூட்டம் இருக்கவே செய்கிறது.

தற்போதைய காலம் மிகவும் சிக்கல் நிறைந்தது. இணையப் பாவனை எம் சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது.

இனியும் நாம் மறைத்து வைக்க வேண்டிய விடயங்கள் என சில விடயங்களை மறைத்து வைத்தால் அது நிச்சயம் எம் சமூகத்தைப் பாதிக்கும் செயலாகவே இருக்கும். ஆயினும் பாலியல் கல்வியை பாடசாலைகளில் போதிப்பதென்பது மிகவும் சிக்கலுக்குரியதாகவே இருக்கும்

**உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சிறப்புச் சித்தி எடுக்க ஏதும் வழி சொல்லுங்கள் வியாசரே?**

*அசானா-யாழ்ப்பாணம்*

குதிரையைக் கொண்டு போய் குளத்தடியில் விட முடியும். குதிரை நினைத்தால் மட்டுமே தண்ணீர் குடிக்க முடியும்.

அதுபோலத்தான் இதுவும் ஆசிரியர்கள் பாகன் மட்டுமே. அவரினால் எம்மை பரீட்சைக்குத் தயார்படுத்த முடியுமே தவிர, பரீட்சை மண்டபத்தில் இருந்து பதில் எழுத வேண்டியது நாம் தான்.

ஒரு குறிப்பிட்ட ஆசிரியரிடம் படித்தால் சித்தி பெறலாம் என்பது தவறு. ஆசிரியரில் 25 விகிதம் எனின் மிகுதி 75 விகிதமும் எம்மைச் சார்ந்ததே.




தாய்மண்ணின் விடுதலைக்காக தம் உயிர் களை தியாகம் செய்த வீரமறவர்களுக்கு அமரன் திரைப்படம் போல உரைப்படம் உருவாக்கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.பிரான்சிஸ்க்
சுதந்திர
பத்திரிகையாளர்

# இனவாதத்தின் நிழலில் இருந்து மக்கள் உழைப்பை உறிஞ்சியவர்

## பிடிபட்ட கதை

மிக அண்மையில் இன்ரப்போலின் உதவியுடன் சிவப்புப் பிடியாணைப் பிறப்பிக்கப்பட்ட துஷாரா சாலிய ரணவக்க தாய்லாந்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார். இளைஞர்கள் மத்தியில் கனடா கனவுகளை விதைத்து பெருந்தொகையான பணத்தை மோசடி செய்தமைதான் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு ஆதாரமாகும். ஆயினும் இவர் இந்த நாட்டில் பல அப்பாவிப் பெரும்பான்மையினரின் மூளையைக் கழுவி இனவாதத்தை விதைத்தவர் என்பது பலரும் அறியாத ஒன்று.

இவர்தான் சிங்கலேய எனப்படும் இயக்கத்தின் தலைமை அதிகாரி. வயது 47 உடைய சாலிய ரணவக்க கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரியும்கூட. 2008 ஆம் ஆண்டு ஒரு லெப்டினனாக இலங்கை இராணுவத்தில் இணைந்த சாலிய மிகக் குறுகிய காலத்திலே ராஜபக்ஷக்களின் நெருக்கத்திற்கும் நேசத்திற்கும் உரியவராக மாறினார்.

இராணுவத்தில் 12 வருடங்கள் பணியாற்றிய சாலிய இராணுவத்திலிருந்து விலகும்போது ஒரு புலனாய்வு அதிகாரியாக இருந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சிலும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சிலும் பணிபுரிந்திருப்பதாகவும் கொசிப்லங்கா இணையத்தளம் தெரிவிக்கின்றது. இதன்படி இவர் 2020 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றிருக்கிறார். ஆனால் இந்தக் குறுகிய காலத்தில் இவர் செய்து வைத்திருக்கும் திருவிளையாடல்கள் திருவிளையாடல்கள்தான். இராணுவ அதிகாரியாக இருந்து கொண்ட இவர் யுத்தக்கால அனுபவங்களை வைத்து "சிங்கலேய" என்ற ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்.

இராணவத்திற்கும் சிங்கலேய ஆடை அணிவித்து புத்தகம் எழுதி பகிர்ந்தது சாலிய ரணவக்கவிற்கு ஒன்றும் வியப்பானதில்லை. இராணுவ வெற்றிகளைப் பயன்படுத்தி மக்களை ஏமற்றிய மஹிந்த ராஜபக்ஷவின் தந்திரம் 2015 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் திடீரென்று சரிந்து வீழ்ந்தது. தோல்விகண்ட ராஜபக்ஷ தான் சிறுபான்மை வாக்குகளால்தான் தோற்கடிக்கப்பட்டேன் என்று தன்னுடைய நம்பிக்கையாளர்களுக்கு தெரிவித்தார்.

அன்று முதல் ராஜபக்ஷ ஆதரவாளர்களும் சமூக ஊடகங்களில் கண் மண் தெரியாத அளவுக்கு இனக் குரோதத்தை வளர்த்தார்கள். இப்படி கட்டுக்கடங்காமல் செய்துகொண்டு இருந்த இனவாதப் பிரசாரங்களுக்கு எந்தவித கடிவாளமும் போடாது வாழாவெட்டியாய் இருந்தது அப்போதைய மைத்திரி - ரணில் அரசு. இப்படி ஒரு நிலைமையில்தான் 27.03.2016 சிங்கலேய என்ற ஓர் இயக்கம் உருவாக்கப்பட்டது. இது முழுக்க சாலிய ரணவக்கவினுடைய ஒரு படைப்பு. இஸ்லாமிய கடும்போக்குவாதம் தொடர்பான மக்களை வழிநடத்திக்கொண்டு இருந்த சாலிய, கோட்டாபய ராஜபக்ஷவினுடைய வழிகாட்டலில் சிங்கலேய அமைப்பை நிறுவியதாகக் கூறுகிறது கொசிப்லங்கா இணையத்தளம். மேலும் சிங்கலேய அமைப்பினுடைய உருவாக்கமானது முஸ்லீம் மதரசாக்கள் மற்றும் காலி நீதிமன்றங்களுக்கு எதிராக தீவிர பிரசாரங்கள் செய்யவும் குறகல, ஸ்ரீபாத போன்ற புத்தஸ்தலங்களில் சிங்கள மேலாதிக்கத்தை நிறுவவும் துணை போனதாகக் கொசிப்லங்கா இணையத்தளம் தெரிவிக்கின்றது.

சிங்கலேய உருவாக்கத்திற்கு முன்பு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது இஸ்லாமிய கடும்போக்குவாத மஹாபிசம் தொடர்பாக மேலதிக ஆய்வு மேற்கொள்ள சாலிய ரணவக்க கட்டார் சென்றிருந்ததாகவும் அவர் அங்கே கைது செய்யப்பட்டதாகவும், ஆனால் இலங்கை அரசியின் ராஜதந்திர தலையீட்டால் அவர் மூன்று நாட்களில் விடுவிக்கப்பட்டு நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதாவும் சொல்லிக்கொண்டு போகிறது கொசிப்லங்கா இணையத்தளம். 2013 ஆம் ஆண்டு காலியில் பொதுபலசேனா அமைப்பின் ஒரு தொடக்க விழாவுக்கு அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவே நேரில் சென்று ஆசீர்வாதம் வழங்கியிருந்தார். அன்று முதல் சட்டபூர்வமாய் அனுமதிபெற்ற ஓர் அமைப்புப்போல மாறிய பொதுபலசேனா முஸ்லீம்கள் பற்றி இல்லாத பொல்லாதக் கட்டுக்கதைகளை சமூகத்தில் பரப்பியது.

15.06.2014 ஆம் ஆண்டு அலுத்கம தர்கா நகர் அழிவுகளுக்கு முதல்நாள் அதனுடைய பொதுச் செயலாளர் ஞானசார தேரர் பேசிய சர்ச்சைக்குரிய கருத்துகள் மிகப்பெரும் சமூக கொந்தளிப்பை ஏற்படுத்தின. கடைசியில் கலவரம் வெடித்தது. மூன்று பேர் கொல்லப்பட்டு வீடுகளும் உடைமைகளும் எரிந்து நாசமாகின. முழு நாட்டிலும் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்து விட்டோம் என்றும் எம்மை மீறி ஒரு ஈ - கொசு பறக்க முடியாது என்றும் தம்பட்டம் அடித்தவர்கள் இரவோடிரவாகத் தர்காநகர் எரிந்தபோது தமக்கு எதுவும் தெரியாததுபோல வாயை மூடிக்கொண்டு இருந்தார்கள். மொத்தத்தில் சிறுபான்மை வாக்குகள் இன்றி தம்மால் பெரும்பான்மை வாக்குகளால் மட்டும் கரையேறிவிட முடியும் என்ற அகம்பாவமே இந்தப் பேரழிவுகளில் மெத்தனமாய் இருக்க இந்தத் தலைவர்களை தூண்டியது. ஆனால் தேர்தல் கணக்குகள் பொய்யாகின. பெரும்பான்மை வாக்குகளில் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை மஹிந்த ராஜபக்ஷ பெற்றபோதிலும் சிறுபான்மை வாக்குகள் அவர்களுக்கு எதிராக 90 வீதத்திற்கு மேல் விழுந்தன.




ஜனாதிபதி தேர்தல் தோல்வியுடன் பொதுபலசேனாவின் மக்கள் கொஞ்சம் தள்ளாடத் தொடங்கியிருந்த நேரம் அது. சிங்கலேய அமைப்பு வளரத் தொடங்கியது. இனவாதம் - பயம் - அச்சம் என்று மூன்று பெரும் தூண்களை பெரும்பான்மை மக்களின் உள்ளங்களில் விதைத்தது சிங்கலேய. 2017ஆம் ஆண்டு ஒரு கொத்துரொட்டியில் மலட்டு மாத்திரைகள் கலந்து விற்பனை செய்யப்பட்டதாகக்கூறி அம்பாறையில் ஒரு கலவரமே வெடித்தது. அந்தச்சூடு ஆறுவதற்குள் முஸ்லீம் கடைகளைப் புறக்கணிக்கும் கோசமும் தீவிரப்படுத்தப்பட்டது. ஒரு கட்டத்தில் சிங்கலேய அமைப்பு இனவாதத்தை ஏகபோகமாய்க் குத்தகைக்கெடுக்க பொதுபலசேனாவின் மகிமை குறைந்து போனது. இதனால் தமக்குள்ளேயே யார் பெரியவர்? என்ற போட்டியும் ஏற்பட்டது.

2015 முதல் 2019 வரை நாட்டில் இன நல்லிணக்கத்திற்கு தீ வைத்த சாலிய ரணவக்கவின் வகிபாகம் 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி ஏற்புடன் முடிந்துபோனது. இப்படி ஊரை அடித்து பதவிப்பீடம் ஏறிய கோட்டாபயவுக்கு என்ன நடந்தது? என்று நாம் இங்கு தெரிவிக்கத் தேவையில்லை. கோட்டாபய ஆட்சி தள்ளாடிக் கொண்டிருந்த காலத்தில் சாலிய ரணவக்க யூரியூப் (வலையொளி) அவதாரம் எடுத்தார். தான் இனவாதத்தை மூலதனமாய் கொண்டு செதுக்கிய நாட்டிலிருந்து பெற்றோல், எரிவாயு இல்லாமல் மக்கள் ஓடித் தப்ப முயன்றபோது அதிலுமே ஆப்படித்தார் சாலிய. 14 டிரவல்ஸ் என்ற நிறுவனத்தை உருவாக்கி ஆட்களை கனடாவுக்கு விசிற் வீசாவிலும் தொழில் வீசாவிலும் அனுப்பப் போவதாய்க்கூறி தலைக்கு 10 ஆயிரம் டொலர் அறவிடத் தொடங்கினார். ஆனாலும் நரகத்திலிருந்து தப்ப முயலும் பாவிகள்போல இங்கிருந்து எந்தவழியிலும் வெளியேற ஆசைப்பட்ட ஒரு கூட்டம் தம் வீடுகளை, நகைகளை நிலபுலன்களை விற்பனை செய்து வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டு இருந்தது. இதை மிகத் தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்ட சாலிய மிக நூதன மோசடியில் இறங்கினார்.

சாலியவிடம் ஏமாந்தவர்களின் பட்டியல் மிக நீண்டது. சாலியவிடம் ஏமாந்ததாகச் சொல்லப்படும் கௌசலியா மதுஷானி என்ற பெண் ஒரு யூரியூப் சனலுக்குப் பேட்டி அளித்திருந்தார். 2022 மே மாதம் தான் கம்போடியா நாட்டுக்குப் போய் சாலியவிடம் 10 ஆயிரம் டொலர்களைக் கொடுத்ததாகவும் தன்னை நிச்சயமாகக் கனடாவுக்கு அழைத்துப் போவதாய் சாலிய சொன்னதாகவும் அப்படிப் போயிருந்தோரின் வீசா, போட்டோ பிரதிகளை சாலிய காட்டியதாகவும், ஆனால் கடைசியில் எதுவுமே நடக்கவில்லை என்றும் அதில் சொல்லியிருந்தார்.

கௌசலியா மதுஷானி, கடவத்த பொலிஸின் வழிகாட்டலில் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யப் போக, சாலிய வியட்நாம், தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் மாறி மாறிப் பயணம் செய்து கொண்டு பெருந்தொகையான இலங்கையர்களை ஏமாற்றியது நிரூபணமாகியிருக்கிறது.

இதனால்தான் சி.ஐ.டி சாலியவிற்கு எதிராக சிவப்பு பிடியாணை கோரியது. சாலியவை எப்போது அழைத்து வருவார்கள் என்று தெரியாது. குற்றம் தாய்லாந்தில் நடந்திருப்பதால் தாய்லாந்தினுடைய பொலிஸ் விசாரணைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். சிங்கலேய என்ற அமைப்பை தொடங்கி ஏனைய இனங்களையும் மதங்களையும் எதிரிகளாகக்காட்டி வெறுப்பையும் வன்மத்தையும் விதைத்து 2019 ஆம் ஆண்டு ஓர் ஆட்சியைக் கொண்டுவருவதில் முன்னின்று உழைத்து, அந்த ஆட்சி குடைசாய்ந்து கொண்டிருந்தபோதுதான் மண்டையை கழுவிய அதே மக்களின் பொருளாதாரத்திலும் கை வைத்திருக்கிறார் சாலிய. கைதாகி வண்டியில் ஏற்றப்பட்டபோது வீடியோ நேரலையில் வந்த சாலிய தான் யாருக்கும் பயம் இல்லை என்றும் மீண்டு வரவிருப்பதாகவும் வீராப்பு பேசினார்.

இத்தனை இருட்டுப் பக்கங்கள் நிரம்பிய வாழ்க்கையில் எந்தவிதக் குற்ற உணர்வும் இல்லாமல், சாலிய ஒரு யூரியூப் சனல் நடத்தி வந்தார். சிவப்பு எச்சரிக்கைப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர், இலங்கை அரசியலையும் பாதுகாப்பு அமைச்சையும் புலனாய்வுப் பிரிவுகளையும் விமர்சித்துக் கொண்டு இருந்தமைதான் இதில் வேடிக்கை. சிங்கலேய உருவாக்கத்திலிருந்து யூரியூப் சனல்வரை சாலியவின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது நான் யாரையும் ஏமாற்றவில்லை ஏமாறத் தயாராயிருந்த ஒரு கூட்டத்திற்கு வாய்ப்பளித்தேன் என்ற திரைப்பட வசனமே ஞாபகத்தில் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 கோடிக்கு ஏலம் போன ஒற்றை ஓவியம்



கலை உலகம் இதுவரை எத்தனை எத்தனையோ உலக சாதனைகள் படைத்திருக்கிறது. அந்த வரிசையில் வரலாற்றில் முதன் முதலில் சுமார் 1,972 கோடிக்கு ஏலம் விடப்பட்ட "Portrait of Elisabeth Lederer" என்ற ஓவியத்தை பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்களை இங்கு காண்போம். ஆஸ்திரேலியாவை சார்ந்த குஸ்டாவ் கிளிம்ட் என்ற ஓவியரின் கைவண்ணமே இந்தப் படைப்பாகும்.

ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் 1862ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் திகதி கிளிம்ட் பிறந்தார். இவர் அப்பா ஒரு நகை வியாபாரி. அதில் கிளிம்ட் தேர்ந்தெடுத்த துறையே இந்த ஓவியத்துறை. ஆரம்பகால கட்டத்தில் இவரது ஓவியங்கள் முழுவதும் இயற்கை சூழல்களை சார்ந்ததாகவே இருந்தது.

மரங்கள், வீடு, வயல்வெளிகள் போன்ற இவரின் ஓவியங்கள் அளவுக்கதிகமான புகழையும், விமர்சனங்களையும் இவருக்கு எடுத்து தந்தது. ஆனால், அதற்கு பின் தன் ஒட்டுமொத்த ஓவியப் பாணியையும் முழுவதுமாய் மாற்றி தனக்கென தனி இடத்தை பிடிக்க ஆரம்பித்தார்.

இதன் விளைவாக இவரின் ஓவியங்கள் பெரிதும் பேசும்பொருளாய் மாறியது. அது ஆபாசம் சார்ந்ததாகவும், பெண் அழகியல் சார்ந்ததாகவும் அதிகம் இருந்தது. ஆரம்ப காலகட்டத்தில் கிளிம்ட் வரைந்த இயற்கை ஓவியப்பாணி ஓவியங்களை வரவேற்ற கலை விமர்சகர்கள், புதிய பாணியாக கையாளப்பட்ட இந்த ஆபாச ஓவியங்களை கடுமையாக எதிர்த்தனர். ஆனால் அத்தகைய ஓவியங்களால்தான் கிளிம்ட் உலகின் உன்னத ஓவியர்களில் ஒருவராக இன்றும் கொண்டாடப்படுகிறார் என்பதுவே மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த ஓவியம், 1914 - 1916ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், வியன்னா பொற்காலத்தில் உருவாக்கப்பட்டது. இந்த ஓவியத்தில் லிசபெத் லெடரர் என்ற பெண், வெள்ளை ஆடை அணிந்து கொண்டு நீலநிற திரைச்சீலையின் முன் நிற்பதை காட்டுகிறது. மேலும் இது இதுவரை மிக அதிக விலைக்கு ஏலம் போன நவீன ஓவியம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் சோதேபிஸ் ஏல நிறுவனத்தில் நடைபெற்ற ஏலத்தில் சுமார் $236.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (இந்திய மதிப்பில் சுமார் ரூ.2000 கோடி) விற்கப்பட்டது. இதுவரை மிக அதிக விலைக்கு ஏலம் போன நவீன ஓவியம் என்ற சாதனை படைத்துள்ளது.

# ஆச்சி அறிவுரை



## ஐயப்பன் விரதம்

## பக்திக்கா? (f)பாசனுக்கா?

### பேராண்டி...

காலத்துக்குக் காலம் நாகரிகம் மாறும். அதில பிழை இல்லை. ஆனால் எங்கட பண்பாடு - கலாசாரங்கள் மாறக்கூடாது. அப்பிடி மாறிட்டா அந்த இனத்தின்ர அழிவுகாலம் தொடங்கிட்டுது எண்டதுதான் பொருள்.

ஐயப்ப விரதம் மிகவும் புனிதமான விரதம். ஐயப்ப விரதம் எண்டுறது நெருப்பாற்றைக் கடக்கிற விரதம் எண்டு சொல்லுவினம். அவ்வளவுக்கு கடுமையான கட்டுப்பாடுகளோடதான் இந்த விரதம் அனுஷ்டிக்க வேணும். அப்பிடியெண்டால்தான் அதின்ர முழுப்பலனும் கிடைக்கும்.

விரத காலமான அறுபது நாளும் கறுப்பு உடைதான் உடுத்த வேணும். காலில செருப்புப் போடக்கூடாது. பஞ்சணையில படுக்கக் கூடாது. தலைமுடி - தாடி வாரக்கூடாது, வெட்டக்கூடாது, மாமிசம் உண்ணக்கூடாது. அதாவது காமம், குரோதம், லோபம், மோகம், மதமாச்சரியம் எண்டுற பஞ்ச இந்திரியங்களையும் அடக்கித் தூயநெறி முறையோட வாழ்வை வாழப் பழகுறதுதான் ஐயப்ப விரதத்தின்ர முக்கியத்துவம் எண்டு கோண்டாவில் ஐயப்பன் கோவில் ஹரிகரன் சுதன் சிவாச்சாரியார் சொல்லினத இந்த இடத்தில சொல்ல வேண்டியது கட்டாயம் பேராண்டி.

உண்மையா, பயபக்தியா இந்த விரதத்தை அனுஷ்டிக்கிற ஆக்கள் இருந்தாலும் பலர் (f)பாசனுக்காகவெல்லோ பேராண்டி இந்த விரதத்தைப் பிடிக்கினம்.

கறுப்பு வேட்டி, கறுப்பு சேட், மாலை தெரியிற மாதிரி நாலு தெறியக் கழற்றி விட்டுக்கொண்டு திரியிற ஆக்களைப் பார்த்தால் சிரிப்பு ஒருபக்கமெண்டால், இப்ப புதிசா வேற ஒரு கறும வேலையையும் தொடங்கிட்டினம்.

ஓம் பேராண்டி, ஐயப்ப விரதம் பெண்கள் பிடிக்கிறதெண்டால் 50 வயது கடந்தால்தான் உகந்தது. இயற்கை விசயங்கள் சிலதாலதான் இந்த வயதுக் கட்டுப்பாடு. ஆனால் இப்ப 25-30 வயது பெண் பிள்ளைகளே கறுப்பு வேட்டி, கறுப்பு சேட் போட்டு மாலை போட்டுக் கொண்டு திரியிறதைப் பார்க்க, கலியுகம் தொடங்கிட்டுது எண்டுதானே பொருள்.

"பாரதி கண்ட புதுமைப்பெண்" எண்டு சொன்னது எதை எண்டு தெரியாமல் இப்பிடி எங்கட பாரம்பரியங்களை உடைச்செறிஞ்சால் அதை ஏற்க முடியாது.

இப்பிடி எங்கட இந்துப் பாரம்பரியங்களை தகர்க்கிற வேலைகளைச் செய்ய, அதைப் பார்த்து மாற்று மதத்தார் சிரிச்சால், அதாலை வெட்கம் எங்களுக்கோ? எங்கட சமயத்துக்கோ எண்டுறதையும் சிந்தித்துப் பார்க்கவேணும் பேராண்டி.

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான வழிமுறை மட்டுமே புலம்பெயர்வுக்கான

## வெளிநாட்டிற்கு செல்வதற்கே ரமேஷ் எப்போதும் விரும்பினான்.

இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் உள்ள ஒரு சிறிய மீனவ கிராமத்தில் வளர்ந்த ரமேஷ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் பணத்தை சேமித்து வைத்திருப்பதையும், மோட்டார் சைக்கிள்களை வாங்குவதையும் சுதந்திரமாக வாழ்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதையும் அவர்கள் சொத்துக்களை வாங்குவதையும் பற்றிய கதைகளை அடிக்கடி வீடியோ வழியாக பார்த்திருப்பதுடன் அவ்வாறான கதைகளை கேட்டும் இருக்கின்றான். இது இவ்வாறிருக்க, அவனது சொந்தக் குடும்பம் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. அவனது தந்தை நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்த பிறகு, குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ரமேஷின் தாய் தெருவோரத்தில் சிற்றுண்டிகளை விற்கத் தொடங்கினார்.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவனாக இருந்த ரமேஷ் தனது குடும்பத்திற்கு ஒத்தாசை வழங்குவதற்காக சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைக் கல்வியை தொடராமல் தனது கல்வியை முடித்துக் கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறினான். மணல் ஏற்றுதல், மீன்பிடி வலைகளை பழுதுபார்த்தல் போன்ற நாளாந்த சம்பளத்திற்கு வேலைகளைச் செய்யத் தொடங்கிய அவனுக்கு இதன் மூலம் ஒரு சிறிய வருமானம் மாத்திரமே கிடைத்தது. ஆயினும், இதைவிட பெரியதொரு வாழ்கையை அடைந்துகொள்வதைப் பற்றி கனவு காண்பதை மாத்திரம் அவன் நிறுத்திக்கொள்ளவில்லை. வெளிநாட்டிற்கு சென்று சிறந்ததொரு வேலையைத் தேடிக்கொண்டு வீட்டிற்குப் பணம் அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் அவனது மனம் இரவு பகல் என பாராமல் போராடிக் கொண்டிருந்தது. தன்னைச் சுற்றியுள்ள ஏனைய இளைஞர்களைப் போலவே புலம்பெயர்வுதான் இந்நிலையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழி என்று அவன் நம்பினான்.

ஒரு நாள், பாடசாலையில் தன்னுடன் படித்த ஒரு நண்பன் ஐரோப்பிய நாடு ஒன்றில் வேலைகளை ஏற்பாடு செய்து தரக்கூடிய ஒரு "நபரைப்" பற்றி அவனிடம் கூறினான். மொழித் திறனோ அல்லது பெருமளவு ஆவணங்களை நிரப்புவதோ தேவையில்லை என்றும் முன்கூட்டியே பணம் செலுத்தினால் மட்டும் போதுமானது என்றும் கூறினான். அந்த வேலையின் ஊடாக மாத்திற்கு ரூபாய் 400,000 இற்கும் மேல் உழைக்கலாம் என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டது. கிடைக்கக் போகும் சலுகையால் மயங்கி எந்தவொரு ஆபத்துகளையும் பற்றி ஒரு கணமேனும் சிந்தியாமல் ரமேஷ் அந்த தொழில் முகவரைச் சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே தன்னிடம் இருந்த அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்தார். அவனது தாயார் இந்த விடயத்தில் சற்று தயக்கம் காட்டினார். ஆனாலும் ரமேஷ் அவரை சமாதானப்படுத்தினான். "இது எனக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு," என்று கூறினான். "நான் சில ஆண்டுகளில் திரும்பி வருவேன், நிலைமை மாறும்." தொழில் முகவர் என்று அழைக்கப்படுபவருக்கு பணம் செலுத்துவதற்காக ரமேஷ் தங்கள் குடும்ப வீட்டை அடமானம் வைத்து ரூபாய் 2 மில்லியன் கடன் வாங்கினான்.

அதனையடுத்து பெயர் கூட தெரியாத ஒரு இடைமாறல் நாட்டிற்கு ரமேஷ் அழைத்துச் செல்லப்பட்டான். ஆனால் அவன் தரையிறங்கிய தருணத்திலிருந்து, விடயங்கள் தடம் மாறி தவறான முறையில் நகர ஆரம்பித்தது. ரமேஷ் விமான நிலையத்திலிருந்து நேரடியாக ஒரு நெரிசலான தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் அங்கு ஏராளமான பிற இலங்கையர்கள் மற்றும் தெற்காசியர்கள் வைக்கப்பட்டிருந்தனர். தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக என்று கூறி அவரது கடவுச்சீட்டும் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் திருப்பித் தரப்படவில்லை. ஒரு கட்டுமான தளத்தில், சம்பளமோ அல்லது ஓய்வு நாட்களோ இல்லாமல், மிக மோசமான சூழ்நிலையில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது. அவனது ஒப்பந்தம் பற்றியோ அல்லது லீவு பற்றியோ கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல்களையும் கூச்சலிடுதலையும் சந்திக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது. ரமேஷுக்கு ஆங்கிலமோ அல்லது அவர் இருந்த இடத்தின் உள்ர் மொழியோ பேசத் தெரியவில்லை என்பதுடன் தொலைபேசி வசதியும் இருக்கவில்லை. தொழில் முகவர் தன்னை ஏற்கனவே இணங்கிக்கொண்ட நாட்டிற்கு அழைத்துச் செல்வார் எனும் எண்ணம் மட்டுமே அவனிடம் இருந்தது. நாட்கள் வாரங்களாக மாறின. ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. தான் ஏமாற்றப்பட்டுள்ளதையும் தனது முகவர் போலியானவர் என்றும் ஒரு ஆட்கடத்தல்காரர் என்பதையும் ரமேஷ் உணரத் தொடங்கினான்.



பின்னர் அந்த ஆட்கடத்தல்காரர் மீண்டும் அவர்களிடம் வந்து ஐரோப்பாவிற்கான பயணம் படகு வழியாக தொடரும் என்று தெரிவித்தார். "இப்போது மக்கள் இப்படித்தான் சென்றடைகின்றார்கள்," என்று கூறினார். "நீங்கள் படகு பயணத்தை எப்படியாவது சமாளித்துக் கொள்ளத் தான் வேண்டும்" என்ற கூறியதும் ரமேஷ் பயந்தான், ஆனால் வேறெந்த வழியும் இருக்கவில்லை என்ற நிலையில், இனிமேல் இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்று நினைத்து அதனை ஒப்புக்கொண்டான்.

இருள் சூழ்ந்த அந்த இரவில் அவனும் மற்றும் பலரும் தூரப் பிரதேசத்தில் இருந்த ஒரு கடற்கரையில் இருந்து ஒரு பழைய மீன்பிடி இழுவைப் படகில் ஏற்றப்பட்டனர். இழுவைப் படகு சன நெரிசல் மிக்கதாக இருந்ததுடன் பாதுகாப்பு உபகரணங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சில பைகளில் இருந்த பிஸ்கட்டுகளைத் தவிர வேறு எந்த உணவும் இருக்கவில்லை என்பதுடன் போதுமான அளவு தண்ணீர் கூட இருக்கவில்லை. அவர்கள் ஆழ் கடலில் பயணிக்க தொடங்கியவுடன் நிலைமை மோசமாக மாறியது. கடல் கொந்தளிப்பாக இருந்ததுடன் கடல் பயணத்தால் பலருக்கு குமட்டல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படத் தொடங்கின. பகலில் வெயில் அவர்களை சுட்டெரித்தது. இரவில், குளிர் காற்று அவர்களின் மெல்லிய ஆடைகளைத் துளைத்து உள்ளே நுழைந்தது. ஒரு நாள் இரவில் ஓர் இளைஞன் படகில் இருந்து தவறி விழுந் ததுடன் அவனைக் கடைசிவரை கண்டுபிடிக்கவே முடியவில்லை.



**ஐந்தாவது நாளில், தண்ணீர் படகுக்குள் கசிய ஆரம்பித்தது. அச்சம் அவர்களை வேகமாகக் கௌவிக்கொண்டது. எல்லா நம்பிக்கையும் இழந்துவிட்டதாக அவர்கள் நினைத்தபோது அவர்களைக்** கடந்து சென்ற ஒரு சரக்குக் கப்பல் அவர்களைக் கண்டு அவர்களை மீட்டு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்த புலம்பெயர்ந்தோரை அருகிலுள்ள நாட்டிடம் ஒப்படைத்தது. தனது உயிரைத் தக்க வைத்துக் கொள்வதை தவிர இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட இறுதியில் ரமேஷ் அந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டான். ஆட்கடத்தல்காரனை நம்பி தனது பணத்தையும் கனவையும் ரமேஷ் இழந்தான். ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற குறுக்குவழி தவறு என்பதை அவன் உணர்ந்தான். பயணம் அவனுக்கு நிறைய பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைய குறுக்குவழிகள் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். எந்த வெளிநாட்டிலும் வேலைக்கு தகுதியும் அனுபவமும் தேவை. எந்த தகுதியும் அனுபவமும் இல்லாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக வழங்கப்படுகின்ற வாக்குறுதி என்பது, நீங்கள் ஆபத்தில் நுழைய முயற்சிக்கிறீர்கள் என்பதற்கான எச்சரிக்கையைத் தவிர வேறொன்றும் அல்ல.

இப்போது தனது கிராமத்தில், ரமேஷ் தனது பயணத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறான். ஒழுங்கற்ற புலம்பெயர்வின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இளைஞர் குழுக்கள் மற்றும் உள்;ர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அவன் இணைந்து பணியாற்றுகிறான். வாக்குறுதியளிக்கப்பட்ட அனைத்தையும் நம்ப வேண்டாம் என்று அவன் மற்றவர்களை வலியுறுத்துகிறான். "உங்களுக்கு ஆவணங்கள் தேவையில்லை என்று யாராவது சொன்னால், அல்லது இவை அனைத்தும் இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அது உங்களுக்கு ஆபத்து வரப்போகின்றது என்பதற்கான எச்சரிக்கை அறிகுறி" என்று அவன் இளைஞர்களிடம் கூறுகிறான். "அவர்கள் உங்களிடம் பொய் சொல்கிறார்கள்". இப்போது பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரையும் ஆட்கடத்தல்காரரையும் எவ்வாறு வேறுபடுத்துவது என்பதை அவன் கற்பிக்கின்றான்.

ரமேஷின் கதை ஒரு உண்மையான சம்பவமே. சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை மறைக்க சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் இதேபோன்ற பயணங்களை மேற்கொண்ட பல இலங்கை இளைஞர்களின் உண்மையான மற்றும் பேரழிவைக் கொண்டு வரும் அனுபவங்களை பிரதிபலிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் மட்டும், ஒழுங்கற்ற புலம்பெயர்வு வலையமைப்பில் சிக்கிய பின்னர் 1,700 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மலேசியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். மார்ச் 2025 இல், ஒவ்வொருவரும் 4.5 மில்லியன் ரூபாய் வரை செலுத்தி பெற்ற போலி விசாக்களுடன் ஒன்பது இலங்கையர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். டிசம்பர் 2023 இல், 14 இலங்கையர்கள் ஒழுங்கற்ற முறையில் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கதைகள் அதிகரித்து வரும் ஒரு நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன. அதிக ஊதியம் தரும் வேலைகளையும், விரைவாக விசாக்களையும் பெற்றுத் தருவதாகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைவதற்கு உத்தரவாதம் வழங்குவதாகவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்கடத்தல்காரரர்கள் இளைஞர்களின் நம்பிக்கைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அதிலிருக்கும் ஆபத்துகளையும் சுரண்டலையும் மற்றும் சட்டரீதியான விளைவுகளையும் அரிதாகவே குறிப்பிடுவார்கள். ஆட்கடத்தல்காரரின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதுதான். மேலும் ஒழுங்கற்ற புலம்பெயர்ந்தோருக்கு உதவ அவர்களுக்கு எந்த பிணைப்பும் கடப்பாடும் இல்லை. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்கடத்தல் என்பது ஒரு சர்வதேசக் குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆட்கடத்தலைக் குற்றமாக பிரகடணப்படுத்தும் சர்வதேச மற்றும் நாடுகளுக்குரிய சட்டங்கள் உள்ளன.

வாக்குறுதிகளால் சிக்கிக்கொள்வது என்றால் என்ன என்பதை ரமேஷ் இப்போது அறிவான். உண்மையான வாய்ப்பு குறுக்குவழிகள் அல்லது இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் வராது என்பதை அவன் மற்றவர்களுக்கு நினைவூட்டுகிறான். புலம்பெயர்வு நம்பிக்கையை அளிக்கும் - ஆனால் பாதுகாப்பான, சட்டபூர்வமான மற்றும் ஒழுங்கான வழிகள் மூலம் அவை மேற்கொள்ளப்படும் போது மாத்திரமே அது அவ்வாறு அமையும். உதவி, விழிப்புணர்வு மற்றும் சரியான வழிகாட்டுதலுடன், இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தையும் - அவர்களின் வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆர்வமுள்ள புலம்பெயர்ந்தோர் தகவலறிந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும், போலி தொழில் முகவர்களாக மாறுவேடமிட்டுக் கொண்டுள்ள ஆட்கடத்தல்காரர்களை நம்பியிருக்கக்கூடாது என்றும் அவன் இப்போது வலியுறுத்துகிறான்.

**பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதற்காக இலங்கையில் உள்ள புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) 077 441 0086 என்ற இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.**

இந்த தகவல் பெட்டிகள் கட்டுரையில் சேர்க்கப்படும் - இந்த கட்டமைக்கப்பட்ட உரை கட்டுரையின் உள்ளே உள்ளடக்கப்படும் என்பதுடன் அது மேலே உள்ள உண்மையான கதையின் தொடர்ச்சியாக இடம்பெறாது)

### நீங்கள் புறப்படுவதற்கு முன்:

வெற்றிகரமான மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு பயணத்தை உறுதிசெய்ய, வருங்காலத்தில் புலம்பெயர்ந்தோர் அத்தியாவசிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

- **வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் வேலை வாய்ப்புகளின் சட்டப்பூர்வ நிலையைச் சரிபார்க்கவும்:** எந்தவொரு கட்டணத்தையும் செலுத்துவதற்கு அல்லது புறப்படுவதற்கு முன் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் சட்டப்பூர்வ பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அரசாங்க தகவல் வழிமூலங்கள் மூலம் வேலை வாய்ப்புகளைச் சரிபார்க்கவும்.
- **சட்டபூர்வமான வழிகளைப் பயன்படுத்தவும்:** பதிவுசெய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்கள், உத்தியோகபூர்வ தூதரக வழிமூலங்கள் அல்லது சரிபார்க்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் விசாக்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- **இடைத்தரகர்கள் மற்றும் உரிமம் பெறாத முகவர்களைத் தவிர்க்கவும்:** புலம்பெயர்வு முகவர்களாகக் காட்டிக் கொள்ளும் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலியாவதைத் தவிர்க்க பதிவுசெய்யப்பட்ட.்.உரிமம் பெற்ற ஆட்சேர்ப்பு நிறுவனங்களுடன் நேரடியாகக் கையாளவும்.
- **ஆராய்ச்சி சார்ந்த இலக்கு நாடுகள்:** நீங்கள் செல்லத் திட்டமிடும் நாட்டின் சட்டங்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு, புறப்படுவதற்கு முன் உங்கள் தொழில்தருநர் பற்றிய தகவல்களைச் சரிபார்க்கவும்.

### பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் தேவைப்படும் அத்தியாவசிய ஆவணங்கள்:

பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான முறையில் புலம்பெயர்வதற்கு, தனிநபர்கள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்களைத் தயாரித்து பாதுகாக்க வேண்டும்:

- **செல்லுபடியாகும் கடவுச்சீட்டு:** சர்வதேச பயணத்திற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டினை கொண்டிருக்க வேண்டும்.
- **விசா:** தேவையைப் பொறுத்து, புலம்பெயர்வோர் சரியான மற்றும் செல்லுபடியாகும் விசா வகையைக் (வேலை, படிப்பு, சுற்றுலா போன்றவை) கொண்டிருத்தல் வேண்டும்.
- **தொழில் அனுமதிப்பத்திரங்கள்:** வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்தால், உத்தியோகபூர்வ தொழில் அனுமதிப்பத்திரம் அவசியானதாகும்.
- **தொழில் ஒப்பந்தங்கள்:** தொழில்தருநரால் வழங்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட ஒப்பந்தம் உங்களிடம் இருப்பதை உறுதிசெய்யவும். வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வது குறித்து முடிவு செய்ய ஒப்பந்த நிபந்தனைகளைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.
- **மருத்துவ அறிக்கை மற்றும் தடுப்பூசி பதிவுகள்:** சில நாடுகளில் தொழில் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார நிலையை அல்லது தொழில் புரிதல் சார்ந்த மருத்துவ தகுதியை உறுதிப்படுத்துக் கொள்வதற்கான சான்றிதழ்களையும் தடுப்பூசிகளுக்கான சான்றுகளையும் அவசியமாக்கியுள்ளன.
- **நிதி நிலைத்தன்மைக்கான சான்று:** சுற்றுலாப் பயணியாகவோ அல்லது கல்விக்காகவோ பயணம் செய்தால் நிதித் திறனை நிரூபிக்க வங்கி அறிக்கைகள் அல்லது அனுசரணையாளர்களின் கடிதங்கள் தேவைப்படலாம்.
- **அவசர தொடர்புகள் மற்றும் ஆவணங்களின் பிரதிகள்:** டிஜிட்டல் பிரதிகளை உங்கள் வசம் வைத்திருங்கள். அத்துடன் உங்கள் பயண ஆவணங்களின் டிஜிட்டல் அல்லது அச்சுப் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். பாதுகாப்பிற்காக அவசர தொடர்பு எண்களை எடுத்துச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும்

## ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?

ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்பது புலம்பெயர்வோரின் பிறப்பிடம், இடைமாறல் இடம் அல்லது சேருமிடம் சார்ந்ததாக உள்நுழைவதற்கு அல்லது வெளியேறுவதற்கு ஏதுவான சட்டங்கள், விதிமுறைகள் அல்லது சர்வதேச ஒப்பந்தங்களுக்கு புறம்பாக நிகழும் ஆட்களின் நடமாட்டத்தைக் குறிக்கிறது. சிலர் புலம்பெயர்வதற்குத் தேவையான தகுதிகள் இல்லாததால் அல்லது சட்ட செயன்முறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் அல்லது ஆட்கடத்தல்காரர்களினால் பரப்பப்படும் தவறான தகவல்கள் காரணமாக ஒழுங்கற்ற புலம்பெயர்வுக்கு முயல்கின்றனர். மேலே விவரிக்கப்பட்ட ரமேஷின் கதை ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வு பயணத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் ஒழுங்கற்ற புலம்பெயர்வு சம்பவங்கள் அதிகரித்ததுடன் இது ஒழுங்கற்ற வழிகளில் புலம்பெயர முயற்சிக்கும் தனிநபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் போக்கை எடுத்துக்காட்டுகின்றது. இது பெரும்பாலும் உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் மற்றும் சட்ட விளைவுகளை எதிர்நோக்க காரணமாக அமைந்துவிடுகின்றது.

கடல் மார்க்கமாக தமது நாடடு மக்கள் ஒழுங்கற்ற முறையில் புலம்பெயர முயன்ற பல சம்பவங்களை இலங்கை அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர். மே 2023 இல், இந்திய சமுத்திரத்தின் ஊடாக அவுஸ்திரேலிய எல்லையை அடைய முயற்சி செய்த 41 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய எல்லைப் படையால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எம் நாட்டின் ஊடகங்களில் இதேபோன்ற எண்ணற்ற சம்பவங்கள் அவ்வப்போது தொடர்ந்து தெரிவிக்கப்படுகின்றன. இந்த சம்பவங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வுடன் தொடர்புடைய அபாயங்களை எடுத்துக்காட்டுவதுடன் இதில் சுரண்டல், தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தலுக்கான சாத்தியக்கூறுகள் போன்றவையும் அடங்கும். இதனை வேறு விதமாக கூறுவதானால், புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறைகள் பற்றியும் அவர்களின் பயணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான புலம்பெயர்வு வழிமுறையினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றியும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் இவற்றை மறந்து தங்கள் இலக்குகளை அடைவதை நோக்கி மாத்திரமே பயணிக்கிறார்கள் என்பதையுமே இது எடுத்துக் காட்டுகிறது. பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான சில முக்கியமான தகவல்களைப் புரிந்துகொள்ள கீழே உள்ள தலைப்புகள் உங்களுக்கு உதவும். புலம்பெயர்வு தொடர்பான குற்றங்கள் உள்ளதுடன் இதில் பெரும்பாலும் புலம்பெயர்ந்தோர் குற்றவாளிகளுக்கு பலியாகின்றனர். அறியாமை காரணமாக புலம்பெயர்ந்தோர் பாதிக்கப்படுகின்றனர் என்பதுடன் அவர்களின் தமது சொந்த நாட்டின் மற்றும் அவர்கள் நுழைய முயற்சிக்கும் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறியதற்கான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்.

## ஆட்கடத்தல் என்றால் என்ன?




- ஆட்கடத்தல் என்பது தேச எல்லைகளை ஒழுங்கற்ற முறையில் கடக்க ஆட்கடத்தல்காரர்களின் சேவைகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு பணம் செலுத்துவதை உள்ளடக்கியதாகும். இது ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராக செய்யப்படும் ஒரு சர்வதேசக் குற்றமாகும். புலம்பெயர்வோர் ஆட்கடத்தல்காரருக்கு பணம் செலுத்துவதன் மூலம் தானாக முன்வந்து தங்களைக் கடத்துவதற்கு ஒத்துழைக்கின்றனர். செல்லுபடியாகும் விசா இல்லாமல் சர்வதேச எல்லைகளைக் கடக்கும் பொருட்டு ஆட்கடத்தல்காரர்களின் உதவியைப் பெறுவதற்கு அவர்களை அணுகும் போதே தாங்கள் சட்ட விரோதமான முறையில் கடத்தப்படுவதற்கு ஆட்கடத்தல்காரரை அணுகுகின்றோம் என்று புலம்பெயர்வோருக்குத் தெரியும். சில நேரங்களில் கடத்தல் முயற்சியை வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்வதற்கு போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது நாடுகளின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறுவதன் மூலம் ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றமாகும்.

மேற்படி கலந்துரையாடப்பட்ட ரமேஷின் சம்பவத்தைப் பொருத்தமட்டில், ஐரோப்பாவிற்குள் நுழைய தனது குடும்பத்தின் வீட்டை அடமானம் வைத்து ஆட்கடத்தல்காரருக்கு பணம் கொடுத்தபோது அவர் தனது பயணத்தைப் பற்றி அறிந்திருந்தார். அவர் தானாக முன்வந்து ஆட்கடத்தல்காரரின் சேவைகளை நாடினார். பெரும்பாலும், புலம்பெயர்வோர் சிறந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் குடியுரிமை வாக்குறுதிகளால் ஆட்கடத்தல்காரர்களால் ஈர்க்கப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட ஆட்கடத்தல்காரரின் உதவியைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்த நாடுகளை அடைந்தவர்கள் பற்றிய உண்மைக்கு மாறான வெற்றிக் கதைகளையும் அவர்கள் கிராமங்களில் கேள்விப்படுகின்றார்கள்.

## புலம்பெயர்வின் வசீகரம்: சிறந்த வாழ்க்கையைத் தேடுதல்

உலகமயமாக்கல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் வாய்ப்புகள் காரணமாக, குறிப்பாக இளைஞர்கள் வெளிநாடுகளில் கல்வி, தொழில் மற்றும் வாழ்க்கை முறை வாய்ப்புகளை ஆராய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும், புலம்பெயர வேண்டிய அவசரமானது சில சந்தர்ப்பங்களில் அவசரமான மற்றும் தகவல் அறியாத முடிவுகளுக்கு வழிவகுப்பதுடன் இந்த நிலையை அறிந்துகொள்ளும் ஆட்கடத்தல்காரர்கள் எளிதான பயணம், அதிக ஊதியம் தரும் வேலைவாய்ப்புகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சட்டப்பூர்வ அந்தஸ்து போன்ற பொய்யான வாக்குறுதிகளை புலம்பெயர்வதற்கு ஆர்வமாக இருப்பவர்களுக்கு வழங்குவதன் மூலம் நிலைமையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். துரதிர'ஷ்டவசமாக, இத்தகைய ஏமாற்று வழிமுறையாக முன்வைக்கப்படும் கவர்ச்சிகரமான விடயங்கள் பெரும்பாலும் சுரண்டல், கட்டாய உழைப்பு மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் அல்லது செல்ல வேண்டிய நாட்டின் குடிவரவு சட்டங்களை மீறியதற்கான சிறைத்தண்டனை போன்றவற்றிற்கும் கூட வழிவகுக்கும்.

## எதிர்காலத்தில் புலம்பெயர்வதற்கு விரும்புவோருக்கான ஆலோசனை

- நீங்கள் ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வோராக மாறுவதற்கு வாய்ப்புள்ளது:
- போலி ஆவணங்களுடன் அல்லது செல்லுபடியாகும் விசா இல்லாமல் ஒரு நாட்டிற்குள் ஒழுங்கற்ற முறையில் நுழைகிறீர்கள்.
- நீங்கள் ஒரு வருகை விசா மூலம் ஒரு நாட்டிற்குள் நுழைந்து, தொழில் விசா இல்லாமல் சேருமிட நாட்டில் தொழிலில் ஈடுபடுகிறீர்கள்.
- விசா காலாவதியான பிறகு சென்றடையும் நாட்டில் நீங்கள் அதிக காலம் தங்குகிறீர்கள்.
- உங்கள் நுழைவுக்கு அனுமதிக்கப்பட்டதைத் தவிர வேறு விடயங்களில் ஈடுபடுகின்றீர்கள். உதாரணம்: மாணவர் விசாவுடன் நுழைந்து வேலையில் ஈடுபடுகிறீர்கள்.

## நீங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறையில் செல்லும்போது என்ன நடக்கும்?

**ஒழுங்கற்ற புலம்பெயர்வைத் தேர்ந்தெடுப்பது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் இதில் பின்வருவன அடங்கும்:**

- உயிருக்கு ஆபத்தான பயணங்கள்.
- ஆட்கடத்தல்காரர்களால் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுதல்.
- நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படுதல் மற்றும் சேருமிட நாட்டின் குடிவரவுச் சட்டங்களை மீறியதற்காக சிறைத்தண்டனை போன்ற சட்ட ரீதியான பாதக விளைவுகள்.
- பணத்தை இழந்துவிடுதல்.
- குடும்பத் தொடர்பினை இழந்துவிடுதல் / தனிமைப்படுதல் மற்றும் மிக மோசமான சூழ்நிலைகளில் உயிர் இழப்பு.
- ஆட்கடத்தல்காரர்கள் பயணத்தின் இடை நடுவில் உங்களைக் கைவிடலாம்.
- பயண ஆவணங்களை பறிமுதல் செய்தல் மற்றும் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல்.
- சொந்த நாட்டில் விட்டுச் சென்ற குடும்பம், கடன் சுமையின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். சில சமயங்களில் கடனை சரியான நேரத்தில் செலுத்தாவிட்டால், கடன் கொடுத்தவர்கள் குடும்பத்திற்கு பிரச்சனையை உருவாக்கலாம்.
- புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற பயணத்தைத் தொடங்கிய பின்னர் ஆட்கடத்தல்காரர்கள் அவ்வப்போது பணத்தை உங்களிமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அவர்கள் புலம்பெயர்ந்தவரை வலுக்கட்டாயமாகவோ அல்லது அச்சுறுத்தல் விடுத்தோ பணம் கொடுக்குமாறு கோருகிறார்கள்.



## நினைவில் கொள்ள வேண்டிய சில விரைவான குறிப்புகள்:

### புறப்படுவதற்கு முன்னர்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடும் போது, ஆட்சேர்ப்பு நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியமானதாகும். இது பொறுப்புக்கூறலையும் ஒழுங்குறுத்தல் தரநிலைகளைப் பின்பற்றுவதையும் உறுதி செய்கிறது. விரைவாக விசாக்களை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கின்ற மற்றும் இலங்கை சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமான போலி ஆவணங்களைத் தயாரித்துத் தருவதாகவும் கூறுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாகத் தோன்றும் ஆட்கடத்தல்காரர்களை நம்புவதைத் தவிர்க்க வேண்டும். மோசடி நடைமுறைகளுக்கு எதிராக் உங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நிறுவனம் அல்லது விசா செயலாக்க முகவரால் உறுதியளிக்கப்பட்ட விசாவின் செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எப்போதும் சம்பந்தப்பட்ட தூதரகம் அல்லது உயர் ஸ்தானிகராலயத்தைத் தொடர்பு கொள்ளவும். விசா செயன்முறை அல்லது குறிப்பிட்ட விசா வகைகள் குறித்து இந்த நிறுவனங்களுடன் சரிபார்ப்பது உங்களுக்கு தெளிவை வழங்குவதுடன் உங்கள் நலன்களைப் பாதுகாக்க உதவும். இது பாதுகாப்பான புலம்பெயர்வு வழிமுறையில் ஈடுபடுவதற்கு உங்களுக்கு உதவும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதலுக்காக உங்கள் பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு உத்தியோகத்தரையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

### புறப்படுதல்:

- உங்கள் கடவுச்சீட்டு, விசா/தொழில் அனுமதிப்பத்திரம், விமான பயணச் சீட்டு மற்றும் தொழில் ஒப்பந்தம் உள்ளிட்ட அனைத்து மூல ஆவணங்களையும் எடுத்துச் செல்லுங்கள்.
- உங்கள் புலம்பெயர்வு/வேலைவாய்ப்பு தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். அத்துடன் ஸ்கேன் செய்யப்பட்ட பதிப்புகளை டிஜிட்டல் முறையில் எடுத்துச் செல்லுங்கள். இந்த ஆவணங்களின் வரிசையில் தொழில் ஒப்பந்தம், கடவுச்சீட்டு, தொழில் சார்ந்த வரையறைகள், விசா, தொழில் வழங்குனரின் விவரங்கள், இலங்கை வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் விவரங்கள் போன்றவை இருக்கலாம்.
- அவசர தொடர்பு இலக்கங்களை கொண்டு செல்லுங்கள். அவற்றில் சேரும் நாட்டில் உள்ள இலங்கை தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கையில் உள்ள உறவினர் அல்லது நண்பர் மற்றும் சேரும் நாட்டில் வசிப்பவர் ஆகியோரின் தொடர்பு இலக்கங்கள் போன்றவை அடங்கலாம்.
- உங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலிலும் மற்றும் தொழில் இடத்திலும் மட்டுமே வேலை செய்யுங்கள். இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவரை மாற்றுவது உங்களை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்பதுடன் அது உங்கள் உழைப்பைச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும். சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவர்களை மாற்றாமல் கவனமாக இருங்கள்.
- உங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருங்கள்.



## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவுசெய்து கொள்ளுதல்.

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்தின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயரும் இலங்கையர்கள் SLBFE இல் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகப் புறப்படும்போது SLBFE இல் பதிவு செய்வது விரும்பினால் செய்யலாம் அல்லது விட்டுவிடலாம் எனும் ஒரு விருப்பத்தேர்வு அல்ல. இலங்கை சட்டத்தின்படி அது கட்டாயமாகும். SLBFE இல் பதிவு செய்யும் செயன்முறையை மீறி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்ல யாராவது உங்களை ஊக்குவித்தால், அது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தயாராக வேண்டும் என்று உங்களுக்கு கூறும் எச்சரிக்கையாகக் கருதப்படலாம். வருகை விசாவில் சென்று வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு SLBFE இல் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் எற்பாடு செய்யப்பட்டுள்ளன. வருகை விசாவில் புறப்படுவதற்கு முன்பு SLBFE பணியகத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் இந்த விவரங்களைப் பெறலாம்.

பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதறகாக, 077 441 0086 என்ற இலகத்தின் வாயிலாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) தொடர்பு கொள்ளவும்.

IOM
UN MIGRATION

(C-347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றம் நகர வளர்ச்சி



# எலிகளுக்கு கொண்டாட்டம்!

எலிகள் நகரங்களில் அதிகமானால், உணவுப் பொருட்கள் சேதமாகும். மின்வயர்களைக் கடித்து சேதப்படுத்தி விடும். வீட்டுச் சுவர்களில்கூட துளை போடும். எலிகளால் நோய்கள் பரவும். முக்கியமாக எலிகள் இருந்தால், பூனைகளும் பாம்புகளும் அதிகரிக்கும்.

மழை, வெள்ளம், பனி உருகுதல் எல்லாம் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் என்று தெரியும். இப்போது அதில் எலிகளின் பெருக்கமும் சேர்ந்துவிட்டது. உலகம் வெப்பமாவதால் நகரங்களில் எலிகளின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டு வருகின்றது. நகர வளர்ச்சி, மக்கள் கூட்டம், உணவகங்கள் அதிகரிப்பு போன்றவற்றால் எலிகள் வாழ ஏதுவாக இருக்கின்றது என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

அமெரிக்காவின் வோஷிங்டனில் எலிகள் பிரச்சினை அதிகம். சான்ஃப்ரான்சிஸ்கோ, டொரான்ட்டோ, சிகாகோ, பாஸ்டன் போன்ற சில நகரங்களிலும் எலிகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன.

எலிகள் வளர்ச்சிக்குக் காரணம் வெப்பம் மட்டும் இல்லை. நகர வளர்ச்சி, உணவகங்கள், குப்பைகள் இதெல்லாம் மேலோட்டமான காரணங்கள். சுற்றுப்புறம் சுத்தமில்லாமல் இருந்தால், உணவுப்பொருள் குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தப்படாமல் இருந்தால், எலிகள் பெருக்கம் அதிகரிக்கத்தான் செய்யும்.

இருட்டு இடங்களும், உணவுக் குப்பைகள் கொட்டப்படுகின்ற இடங்களும்தான் எலிகள் ஒளிந்து வாழுகின்ற இடங்கள். இந்த மாதிரியான இடங்களை சுத்தமாக்கினால், எலிகள் தானாகக் குறைந்து விடும்.

# வெங்காயங்களில் கருப்புப் பூஞ்சை: கழுவினால் போதுமா? தோலை நீக்கிவிட வேண்டுமோ?







இப்போது நாம் வாங்கும் சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் இரண்டிலும் கருப்பு பூஞ்சைகளை அதிகம் பார்க்க முடிகிறது. சிலர் அந்தப் பூஞ்சையை கழுவிவிட்டு வெங்காயத்தை பயன்படுத்துகிறார்கள். சிலர் அந்தப் பூஞ்சை இருக்கும் தோலை நீக்கிவிட்டு பயன்படுத்துகிறார்கள்.

இதற்கு மிக முக்கியமான இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, வெங்காயத்தின் தோல் மீது ஏதாவது அடி பட்டிருந்தால் இந்தப் பூஞ்சை வரும். இன்னொன்று, எங்கேயாவது சேமித்து வைக்கும்போது, ஈரப்பதம் அதிகமானால், பூஞ்சை ஏற்படும்.

இந்தப் பூஞ்சை பார்ப்பதற்கு கருப்பு நிறுத்திலும், பவுடர் போன்ற தோற்றத்திலும் தான் இருக்கும். இதற்கு "கருப்பு பூஞ்சை" என்று பெயர். ஆங்கிலத்தில், 'Aspergillus Niger' என்று கூறுவார்கள்.

இதைத் தடுப்பதற்கு என தனியாக எந்தவொரு பூஞ்சைக்கொல்லியும் இல்லை. அதனால், இந்தப் பூஞ்சை ஏற்படாமல் தடுக்க, மேலும் பெரிதாக பரவவிடாமல் தடுக்க, வெங்காயங்களை நன்கு காற்றோட்டமான பகுதியில் வைக்க வேண்டும். இந்த இடத்தில் ஈரப்பதம் அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வெங்காயத்தை எங்கேயாவது எடுத்து செல்லும்போதோ, சேமிக்கும்போதோ, அந்த இடத்தில் 59 டிகிரி ஃபேரன்ஹீட் வெப்பம் உள்ளது போல பார்த்துக்கொண்டால் நல்லது. இப்போது மழைகாலம். அதனால், இந்த விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்ததாக, வெங்காயத்தில் ஏதாவது அடி பட்டாலும், இந்தப் பூஞ்சை வந்துவிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதனால், அறுவடை முதல் போக்குவரத்து வரை அனைத்தின் போதும் வெங்காயங்களை கையாள்வதில் கவனம் தேவை.

வெங்காயத்தின் மேல் தோலில் மட்டும் இந்தப் பூஞ்சை இருந்தால் கழுவி, அந்தத் தோலை நீக்கி வெங்காயத்தை பயன்படுத்தலாம்.

ஆனால், இந்த வெங்காயங்களைக் கழுவும் போது, கவனம் வேண்டும். பூஞ்சை உள்ள வெங்காயத்தை நல்ல வெங்காயங்களோடு கழுவுவோம். இந்த நேரத்தில் நல்ல வெங்காயங்களிலும் இந்தக் கருப்பு பூஞ்சை பரவலாம். அதனால் மிகக் கவனம் தேவை.

சிறிய அளவில் இருக்கும் இந்தப் பூஞ்சை ஆரோக்கியமாக இருக்கும் ஒருவருக்கு பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால், நீண்டகால பயன்பாட்டில் ஆபத்து ஏற்படுத்த வாய்ப்பு உண்டு. இந்தப் பூஞ்சை நச்சு ஒன்றை வெளியிடும். அது சமைத்தால்கூட, போவதற்கான வாய்ப்புகள் குறைவு.

அதனால், கழுவினால் போய்விடும். சமைத்தால் போய்விடும். என்று நினைக்காமல், சேமிக்கும்போது கவனம் செலுத்த வேண்டும்.

## சமைப்போம் சுவைப்போம்



# சமைக்காத உணவுகள்: சத்தான உணவுகள்...



### பேரீச்சை கீர்



200 கிராம் பேரீச்சைப் பழங்களை ஊறவைத்து கொட்டை நீக்கி மிக்ஸியில் அடித்துச் சாறு எடுக்கவும். 2 மூடி தேங்காய்த் துருவலை அரைத்து பால் எடுத்து, தேவையான நீர் கலந்து ஏலக்காய்த்தூள், பேரீச்சைச் சாறை சேர்க்கவும்.

**பலன்கள்:** குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். சளி, இருமல் தொல்லையால் அவதிப்படுபவர்கள், இதைக் காலை உணவாக சாப்பிடலாம். இரத்தம் விருத்தியாகும். உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியும், தெம்பும் கூடும்.

### கரட் கீர்

500 கிராம் கரட்டை கழுவிச் சுத்தம் செய்து துருவி மிக்ஸியில் அரைத்துச் சாறு எடுக்கவும். 2 மூடி தேங்காய்த் துருவலை மிக்ஸியில் அரைத்துத் தேங்காய்ப்பால் எடுக்கவும். இந்த் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து தேவையான தண்ணீர் கலந்து, 200 கிராம் வெல்லத்தூள், ஏலக்காய்த்தூள் கலந்து பருகலாம்.



**பலன்கள்:** கண்ணுக்கு மிகவும் நல்லது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலையில் கொடுக்கலாம். தொடர்ந்து சாப்பிட, புற்றுநோய் விலகும். குடல் புண் சரியாகும்.

### பச்சைப் பயறு

நல்ல குடிநீரில் எட்டு மணி நேரம் ஊறவைத்து, நன்றாகக் கழுவி, ஈரமான பருத்தித் துணியில் கட்டி முளைக்க விடவும். காலையில் ஊறவைத்து மாலையில் நீரை வடித்துக் கட்டினால், மறுநாள் அதிகாலை வெள்ளை முளை எட்டிப் பார்க்கும். தினமும் ஒரு நபருக்கு 50 முதல் 100 கிராம் வரை தேவைப்படும். பல்லால் கடிக்க முடியாதவர்கள், இந்த முளைப் பயறை நீர் சேர்த்து அரைத்து அதில் வெல்லம், தேன், தேங்காய் துருவல், உலர் திராட்சை சேர்த்து காலை டிஃபனுக்கு பதிலாக சாப்பிடலாம்.



**பலன்கள்:** அதிகப் புரதச்சத்து இருப்பதால், வளரும் குழந்தைகளுக்கு நல்ல ஊட்டத்தைத் தரும். அல்சரைக் கட்டுப்படுத்தும். சருமத்தைப் பளிச்சென வைத்திருக்கும். நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காட்டுக்கு ராஜா சிங்கமானாலும் தன் இருப்பைப் பாதுகாக்க அலைபடும் பாடு...



ஆண் சிங்கங்கள் வேட்டையாடாது என்பதை முழுக்க உண்மை என்று சொல்லமுடியாது. அது உண்மையே கிடையாது என்று மறுக்கவும் முடியாது. ஏன் தெரியுமா...?

சிங்கமாக பிறப்பதன் கஷ்டம் அந்த சிங்கங்களுக்கு மட்டுமே தெரியும். பிறக்கும்போது அந்தப் பிஞ்சு சிங்கத்துக்கு கண்கள் தெரியாது. தாய் சிங்கம் சற்று ஏமாந்தாலும் கழுதைப்புலிகள் அந்தக் குட்டியை தூக்கிச் சென்று விடும். இது மட்டுமா...? ஒருவேளை அந்தப் பிஞ்சு சிங்கம் பிறந்த நேரத்தில் ஏற்கெனவே இருக்கின்ற சிங்கத் தலைவனை கொன்றுவிட்டோ அல்லது அதை விரட்டிவிட்டோ சிங்கக் கூட்டத்துக்கு புதிய தலைவனாகும் வேறோர் ஆண் சிங்கம், தனக்கு போட்டியாக எதிர்காலத்தில் வரக்கூடிய ஆண் குட்டிகளை கொன்றுபோட்டு விடும். இவ்விரண்டு ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்த சிங்கக்குட்டிகள் பதினோராவது மாதத்தில் இருந்து வேட்டையாட பழகும். என்றாலும் அதனுடைய இரண்டு வயது வரை அது தன்னைக் காப்பாற்றிக் கொண்டால் மட்டுமே அது தன்னுடைய முழு ஆயுட்காலமான கிட்டத்தட்ட 16 வருடங்கள் வரை கம்பீரமாக வாழ முடியும்.

சிங்கங்கள் குழுவாக வாழ்கிற ஒரு காட்டுயிர். சிங்கக் கூட்டத்தை “பெருமை” என்று பொருள்படக்கூடிய ஆங்கில வார்த்தையான ‘Pride’ என்று குறிப்பிடுகிறது விலங்கியல். ஒரு சிங்கக் கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று ஆண் சிங்கங்கள், ஐந்தாறு பெண் சிங்கங்கள், சிங்கக் குட்டிகள் என்று சேர்ந்து வாழும். பெண் சிங்கங்கள் தங்கள் கூட்டத்திலேயே தொடர்ந்து இருக்கும். கூட்டத்துக்கு தலைவனாக இருக்கிற ஆண் சிங்கம், தன் கூட்டத்தில் இருக்கிற பிறந்த இளம் பெண் சிங்கங்களுடன் இணை சேராது. அதாவது, தன்னுடைய மகள்களுடன் இணை சேராது.

மூன்று முதல் நான்கு வயதில் இனப்பெருக்கப் பருவத்துக்கு சிங்கங்கள் வந்து விடும். இந்தக் காலகட்டத்தில் தங்கள் கூட்டத்தில் பிறந்த ஆண் சிங்கங்களை, பெண் சிங்கங்கள் விரட்டி விடும். இதற்குக் காரணம், சகோதர உறவுக்குள் இனப்பெருக்கம் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காகத்தான். இப்படி விரட்டி அடிக்கப்படுகிற இளம் ஆண் சிங்கம் தனக்கான துணையை வேறொரு சிங்கக் கூட்டத்திலிருந்து தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், அது அத்தனை சுலபம் அல்ல. வேறொரு சிங்கக் கூட்டத்தின் தலைவனாக இருக்கிற ஓர் ஆண் சிங்கத்துடன் சண்டையிட்டு ஜெயித்தால் மட்டுமே அந்தக் கூட்டத்தில் இருக்கிற பெண் சிங்கங்களுடன் இணை சேரமுடியும். ஒருவேளை தோற்றுவிட்டால் நாடோடிகளாக காடு முழுக்க அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான். அப்படியே ஓர் ஆண் சிங்கத்தை ஜெயித்து அதன் கூட்டத்தை கைப்பற்றினாலும், அடுத்த நான்கு அல்லது ஐந்து வருடங்களில் வேறொரு இளம் ஆண் சிங்கம் இதை விரட்டி அடித்துவிட்டோ அல்லது கொன்றுவிட்டோ அந்த சிங்கக் கூட்டத்தின் தலைவனாகி விடும்.

சிங்கங்களின் சமூக அமைப்பின்படி, ஆண் சிங்கங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒருவகை சிங்கம் சிங்கக் கூட்டத்துக்கு தலைமை ஏற்று தன் கூட்டத்தை பாதுகாக்கும். இரண்டாவது வகை, பேச்சுலர் சிங்கங்கள். இந்த ஆண் சிங்கங்கள் அதனுடைய இனப்பெருக்க வயதில் அதனுடைய கூட்டத்திலிருந்து பெண் சிங்கங்களால் விரட்டி விடப்பட்டவை. இந்த ஆண் சிங்கங்கள்தான், சிங்கக்கூட்டத்தின் தலைவனாக இருக்கிற ஓர் ஆண் சிங்கத்தை எதிர்த்து அதைக் கொன்றுவிட்டோ அல்லது விரட்டிவிட்டோ அந்தக் கூட்டத்தின் தலைவனாகி விடும். மூன்றாவது வகை நாடோடி சிங்கங்கள். இவை தனியாகவே சுற்றித் திரிந்து கொண்டிருக்கும். இதற்கு இணை சேர பெண் சிங்கங்கள் கிடைப்பது அரிது.

### ஆண் சிங்கங்களைப் பற்றி பேசும்போது அவற்றின் தங்க நிற பிடரியை பற்றி பேசாமல் இருக்க முடியுமா?

பிறந்த மூன்று முதல் நான்காவது மாதங்களில் பிடரி முடியின் வளர்ச்சி மெதுவாக ஆரம்பிக்கும். ஒன்று முதல் இரண்டு வயதில் இந்தப் பிடரி, சிங்கத்தின் கழுத்து, தோள்பட்டை ஆகியவற்றை தொடுகிற அளவுக்கு வளர்ந்து விடும். இருந்தாலும் இது முழுமையான பிடரி வளர்ச்சி கிடையாது. இரண்டு முதல் மூன்றாவது வயதில் கழுத்து, தோள்பட்டை, காது என அனைத்தையும் மறைத்து அடர்த்தியாக பளபளவென கம்பீரமாக ஜொலிக்கும். சிங்கத்தின் பிடரி மூன்றிலிருந்து நான்காவது வயதில் சிங்கத்தின் நெஞ்சையும் மறைத்து பிடரி இன்னும் நீளும். இந்த நேரத்தில் பொன் மஞ்சள் நிறமும், மரக்கிளையின் நிறமும் கலந்த நிறத்தில் இருந்த பிடரியானது, கருமை நிறத்துக்கு மாறத் தொடங்கும். இந்த இளம் ஆண் சிங்கம்தான் முதிர்ந்த ஆண் சிங்கங்களுக்கு சவால் கொடுப்பவை. நான்கு வயதுக்கு மேல் அது ஒரு முழு வளர்ச்சியடைந்த ஆண் சிங்கமாக கம்பீரமாக நிற்கும். இந்தப் பிடரியும் கம்பீரமும்தான் ஆண் சிங்கத்தின் இனப்பெருக்க ஈர்ப்பு. பிடரியின் நீளம், பளபளப்பு, அடர்த்தி இந்த மூன்றும் அதன் மரபணு, ஆரோக்கியம், சுற்றுச்சூழல் இந்த மூன்றையும் பொறுத்தது.

ஆண் சிங்கங்கள் வேட்டையாடாது என்பதை முழுக்க உண்மை என்று சொல்ல முடியாது. அது உண்மையே கிடையாது என்று மறுக்கவும் முடியாது. ஏன் தெரியுமா...? தன் குடும்பத்தால் விரட்டப்பட்ட ஆண் சிங்கங்களும், நாடோடிகளாக காட்டில் அலைந்து கொண்டிருக்கிற ஆண் சிங்கங்களும் நன்றாகவே வேட்டையாடும். வேட்டையாடி உணவு தர இவற்றுக்குத்தான் பெண் சிங்கங்கள் கிடையாதே. அப்படியென்றால், சிங்கக் கூட்டத்தின் தலைவன் வேட்டையாடாதா என்றால், அப்படியும் சொல்லிவிட முடியாது. சிங்கக் கூட்டத்தில் இருக்கிற ஆண் சிங்கங்கள் எந்நேரமும் ஏதோ ஒரு மரத்தடி நிழலில் ஓய்வாக படுத்தபடியே இருக்கும். இப்படி இருப்பதால் நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 20 மணி நேரம்கூட ஆண் சிங்கங்கள் தூங்குமாம். அதற்காக ஆண் சிங்கங்களை சோம்பேறி என்றும் குறை சொல்லவும் முடியாது. குடும்பத்துடன் இருக்கிற ஆண் சிங்கங்களின் வேலை, தன் கூட்டத்துக்கான எல்லைகளை கட்டமைத்து பாதுகாப்பது.

வேறோர் ஆண் சிங்கம் தன் கூட்டத்தை கைப்பற்றாதபடி எச்சரிக்கையாய் இருப்பது ஆகியவையே. வேறொரு ஆண் சிங்கம் தன் கூட்டத்தை கைப்பற்ற வந்தால் அதனுடன் மூர்க்கமாக சண்டையிட்டு அதை கொல்லவோ அல்லது விரட்டவோ செய்வதற்கான சக்தியை சேமித்து வைப்பதற்காகத்தான் ஆண் சிங்கங்கள் இந்த அளவுக்கு ஓய்வெடுக்கின்றன என்கிறார்கள் காட்டுயிர் ஆர்வலர்கள்.

சரி, சிங்கக் கூட்டத்தில் இருக்கிற ஆண் சிங்கங்கள் வேட்டையாடவே செய்யாதா என்றால் அப்படி கிடையாது. சிங்கங்களுக்கு ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, வரிக்குதிரை, யானை போன்ற தங்களைவிட உயரமான, பெரிதான விலங்குகளை பெண் சிங்கங்கள் வேட்டையாடும்போது ஆண் சிங்கங்களும் உடன் சேர்ந்து கொள்ளும். ஆண் சிங்கங்களுக்கு வேட்டையாடுவதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. அது அதனுடைய கம்பீரமான பிடரி. பெண் சிங்கங்கள் மறைந்திருந்து தங்களுக்கான உணவை வேட்டையாடி விடும். ஆனால், சிங்கத்தின் பிடரி, சிங்கம் மறைந்திருந்தாலும் அதன் வேட்டை உயிர்களின் கண்களில் பட்டுவிடும். பிறகு அது உயிர் தப்ப ஓடிவிட்டால் ஆண் சிங்கத்துக்கு உணவு எது?

பெண் சிங்கத்தின் கருத்தரிப்பு காலம் 108 நாட்கள். ஒரு பிரசவத்தில் இரண்டிலிருந்து நான்கு சிங்கக்குட்டிகள் வரை பிறக்கும். மற்ற சிங்கக் கூட்டத்தில் இருக்கிற ஆண் சிங்கங்களால் தன்னுடைய குட்டிகளுக்கு ஆபத்து வந்து விடக் கூடாது என்பதற்காக பெண் சிங்கம் என்ன செய்யும் தெரியுமா?

தன் கூட்டத்தில் இருக்கிற ஆண் சிங்கங்களுடன் மட்டுமல்லாமல், அவை அறியாமல் அடுத்தக் கூட்டத்தில் இருக்கிற மற்ற ஆண் சிங்கங்களுடனும் பெண் சிங்கங்கள் உறவு கொள்ளும். இதனால் வேறு ஓர் ஆண் சிங்கம், ஒரு கூட்டத்தின் தலைவனை கொன்றுவிட்டாலோ அல்லது விரட்டிவிட்டாலோ, அந்தக் கூட்டத்தில் இருக்கின்ற சிங்கக் குட்டிகளை கொல்லாது. ஏனென்றால், அந்தக் குட்டிகள் தன்னுடையதாகவும் இருக்கலாம் என்ற காரணத்தால் தன் குட்டிகளை பாதுகாக்கவே பெண் சிங்கங்கள் இந்த உத்தியை பின்பற்றுகின்றன. ஆக சிங்கங்களாக இருப்பதன் கடினம் அவற்றுக்கு மட்டுமே தெரியும்.



# தெளிவே என் சிந்தனையுள்... 38

இரண்டு இளைஞர்கள் காட்டில் மாட்டிக் கொண்டனர். பசி, இரவுப் பயம் என்பன அவர்களை பயமுறுத்தின.

திடீரென அங்கு ஒரு முதியவர் தோன்றி வாருங்கள் என ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்று, இருவரையும் இரண்டு அறைகளில் தங்க வைத்தார்.

விடிந்ததும் முதியவர் ஒருவனின் அறைக் கதவைத் திறந்தார். அவன் பசியினால் வாடியபடி, பசி உயிரைக் கொல்கிறது. எப்படித் தூங்க முடியும்? என்றான்.

அவனையும் அழைத்துக் கொண்டு இரண்டாமவனின் அறைக் கதவைத் திறந்தார். அவன் நல்ல உணவு உண்டு நிம்மதியாகத் தூங்கி எழுந்திருந்தான்.

முதலாமவனுக்குக் கோபம் வரவே எனக்கு எதுவும் இல்லை. உனக்கு மட்டும் உணவு எப்படிக் கிடைத்தது என்றான் கோபத்துடன்.

அவன் கூறினான். இந்த அறையில் சமைத்து உண்ணக்கூடிய பொருட்கள் இருந்தன. அவற்றைச் சமைத்துப் பசியாற்றினேன் என்றான்.

அப்போதுதான் தான் தங்கியிருந்த அறையிலும் சமையல் செய்யக்கூடிய பொருட்கள் இருந்தமை அவனுக்கு நினைவில் வந்தது.

**அன்பானவர்களே!**

எம்மிடம் முயற்சியும் பரந்துபட்ட அறிவும் தேவை. இல்லையேல் கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்த கதையாகிவிடும் எம் கதையும்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா துளிகள்





**"96" படத்தின்** இரண்டாம் பாகத்தை டைரக்டர் பிரேம்குமார் எழுதி முடித்துவிட்டார். "கதை சிறப்பாக வந்திருக்கிறது" என சந்தோஷமாகச் சொல்லியிருக்கும் பிரேம்குமார், "முதல் பாகத்தில் முக்கிய பாத்திரங்களை ஏற்றவர்களே இரண்டாம் பாகத்திலும் நடிக்க வேண்டும்.

மற்றவர்கள் நடித்தால் அந்தப் படத்தை அவ்வளவு பொருத்தமாக எடுக்க முடியாது" என்றும் சொல்லியிருக்கிறார்.

## சொல்லவே இல்ல... பரதா







**"சிறகடிக்க ஆசை"** சீரியலில் ரோகிணி கேரக்டருக்கு ஆடிஷன் எல்லாம் சென்றேன். ஆனாலும் அந்தக் கேரக்டரைச் செய்ய முடியாமல் போய்விட்டது.

**"குழந்தைக்கு அம்மாவா"** என யோசித்ததால் வந்த வினை. ஒரு ஹிட் சீரியல் வாய்ப்பை மிஸ் செய்வது ரொம்ப நாள் மறக்க முடியாத ஒரு துயரம், தெரியுமா?"





**"பாகுபலி",** தென்னிந்தியாவின் அனைத்து மொழிகளிலும் மிகப்பெரிய வெற்றி பெற்றது. அதில், எத்தனையோ கேரக்டர்கள் இருந்தாலும், கட்டப்பாவின் கேரக்டர் அலாதியானது. "பாகுபலி"யின் திரைக்கதையாசிரியர் விஜயேந்திர பிரசாத், கட்டப்பாவின் பின் கதையை இப்போது தனியாக எழுதி வருகிறார். ஆக, சத்யராஜ்'க்கு பெரிய கேரக்டர் காத்திருக்கிறது.



**ஆர்யா** நடிக்கும் "வேட்டுவம்" படப்பிடிப்பை அடுத்த மாதம் முடிக்கிறார், இயக்குநர் பா.இரஞ்சித். இதையடுத்து, ஏற்கெனவே தயார் நிலையில் உள்ள, "சார்பட்டா பரம்பரை" இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பைத் தொடங்க ஏற்பாடுகள் நடக்கின்றன. ஆர்யாவும் இதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்.



**கார்த்தி, கல்யாணி பிரியதர்ஷன்** நடிக்கும் "மார்ஷல்" படப்பிடிப்பு இராமேஸ்வரம் பகுதிகளில் மும்முரமாக நடந்து வருகிறது. 1960 காலகட்டங்களில் நடக்கும் கதை இது. படத்தின் இசையமைப்பாளரான சாய் அபயங்கர், இப்போதே இரண்டு பாடல்கள் கம்போஸ் செய்து கொடுத்திருக்கிறார். "மார்ஷல் கதை சுவாரஸ்யமானது. மக்களுக்கு ரொம்பவே பிடிக்கும்" என்கிறார் சாய் அபயங்கர்.



**பிரசன்னா நடித்த** "கண்ட நாள் முதல்" படத்தின் மூலம் அறிமுகமான ரெஜினா கஸன்ட்ரா, சினிமாவில் 20ஆவது ஆண்டைக் கொண்டாடுகிறார். இப்போது, பாலிவுட்டில் இரண்டு படங்களில் நடித்துவரும் இவர், தமிழில் சுந்தர்.சி-யின் "மூக்குத்தி அம்மன் 2" இல் முக்கியமான ரோலில் நடித்துவருகிறார். அடுத்த ஆண்டு, ரெஜினாவின் ஆண்டாக இருக்கும். மூன்று படங்களுமே 2026இல் ரிலீஸ் ஆகிவிடும் என்கிறார்கள். இவர் நடித்த ஹீரோயின் சென்ட்ரிக் படமான "ப்ளாஷ் பேக்"கை விரைவில் திரைக்குக் கொண்டு வரவும் திட்டமிட்டுள்ளனர்.

## மினி டைரி... கிருத்திகா லட்டு



**தேனிலவு டு மூன்று முடித்து டிராவல்?**

"தேனிலவு" சீரியலில் நடிக்க வராமல் தவித்தேன். திருமுருகன் சார் நம்பிக்கையாகப் பேசினார். "உனக்கு வரும்" என்று அவர் சொன்னதை அப்படியே பிடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது இன்றுவரை தொடருது."

**நடிக்க வராமல் இருந்தா?**

"ஹெச்.ஆர். வேலையைப் பார்த்துவிட்டு இருந்திருப்பேன்."

**ஹீரோயின் அல்லது வில்லி?**

"இரண்டுமே ஒன்றுதான். ஆனால் நெகட்டிவ் ரோலை கொஞ்சம் ரசிக்கலாம். மக்கள் அதிகமாக நம்மைப் பற்றி நினைக்க வைக்கிறது அதுதான்."

**கடவுள் நம்பிக்கை?**

"உண்டு. முருகன் என் இஷ்ட தெய்வம்."

**சினிமா?**

"படங்கள் செய்துகொண்டுதான் இருக்கிறேன். வரும் எல்லா வாய்ப்புகளையும் ஏற்க விருப்பமில்லை. கிளாமரெல்லாம் ஓகே என்றால் நிறையப் படங்களில் வரலாம். எனக்கு அதில் இஷ்டமில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## "பாஸ்போர்ட்"




**BOY :** டார்லிங் நேற்று நான் ஒரு கனவு கண்டேன்.
**GIRL:** என்ன கனவுடா அது?
**BOY:** நீயும் நானும் அமெரிக்காவில் டூயட் பாடி, டான்ஸ் ஆடினோம். இதைக் கேட்டதும் அவளுக்கு கோபம் வந்தது. அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்தாள்.
**BOY :** இப்ப எதுக்குடி என்னை அறைந்தாய்?
**GIRL:** லூசாடா நீ? என்னிடம்தான் "பாஸ்போர்ட்" இல்லையே. பின்ன எப்படிடா நான் உன்கூட அமெரிக்கா வந்தேன்?
**BOY :** Mind Voice (இவள லவ் பன்னதுக்கு பதிலா, நாலு கழுதைய வாங்கி மேய்ச்சிருக்கலாம்)

## பார்வையின் இரகசியம்



மிகவும் பெயர் பெற்ற ஒரு மதத்தலைவர். மனநல மருத்துவ மனை ஒன்றினைப் பார்வையிட வந்தார். அங்கிருந்த நோயாளிகள் அனைவரையும் ஓரிடத்தில் உட்கார வைத்திருந்தனர்.

மதத்தலைவர் அவர்களிடம் பேச விரும்பினார். அங்கிருந்த அதிகாரிகள் மகிழ்வுடன் சம்மதித்தனர். அவரும் பேச ஆரம்பித்தார். மனநலம் அற்ற அந்த நோயாளிகள் ஒவ்வொருவரும் ஒரு திசையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஒரே ஒரு நோயாளி மட்டும் அவர் பேசுவதை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய இமைகள் கூட அசையவில்லை. மதத்தலைவரின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். மனநல மருத்துவமனை என்பதால் மதத்தலைவர் எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்த ஆள் தீவிரமாகக் கவனித்தது குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்தார். பேச்சு முடிவுற்றதும் அந்த ஆள் எழுந்து போய் அங்கிருந்த வார்டனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். மதத்தலைவரும் தன்னுடைய பேச்சுக் குறித்து அவர் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதை புரிந்துகொண்டார். பின்னர் வார்டனிடம், "அந்த ஆள் என்ன சொன்னார்" என்று வினவ. வார்டன் சிறிது தயங்கிவிட்டு சொன்னார்.

**"என்ன கொடுமையடா சாமி, இவனெல்லாம் வெளியே இருக்கிறான். நான் உள்ளே இருக்கிறேன் என்கிறான் ஐயா"**

அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

# கவிதைக் கலசம்

## கண்ணீரக் கார்த்திகை



கார்த்திகையில் வானம் ஏன்
கண்கலங்கி அழுகின்றது
தேற்றுவார் இல்லை
தேம்பி தேம்பி அழுகின்றது
நாம் வாழ களம்தனிலே
உயிர்கொடுத்த வீரர்களை எண்ணியோ
தலை தலையாய்
அடித்து இடி மின்னலாய் வெடித்து
விடிய விடிய அழுகின்றது
எரிகின்ற தீபங்களோ
எண்ணெய் முடிய
அணைந்து போக
எம் நெஞ்சில் ஒளிர்கின்ற தீபம்
நீங்கள் என்றென்றும்
அணையாமல் இருப்பீர் வரலாற்றில்
நிலைப்பீர்

**த. மயூரதன்,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**

## கார்த்திகையில் கைதொழுவோம்



கருமேகம் கீழிறங்கி
கதைபேசும் கார்த்திகை
கண்ணீரால் எம்தேசம்
கரைகின்ற கார்த்திகை
காவலர்கள் காட்சி தரக்
காத்திருக்கும் கார்த்திகை
கல்லறைகள் எழுச்சியுற்றுக்
கானமிசைக்கும் கார்த்திகை
கரிகாலன் என்றவனைக்
கண்டெடுத்த கார்த்திகை
கடவுளர்கள் திருமுகத்தை
காணுகின்ற கார்த்திகை - அந்த
கண்மணிகள் காலடியை
கைதொழும் கார்த்திகை!

**சாந்தையூர் வினிஸ்,**
**பண்டத்தரிப்பு.**

## நடக்கக் கூடாதது நடந்தது

தீபாவளித் தின்பண்டம்
அம்மாவும் செய்தாள்
உக்காத குப்பையில் கிடந்தது

..........................

எனது மிதிவண்டி
இருட்டுக்கு எப்போதும் அஞ்சாது
அதில் வரும் இரைச்சல்

..........................

எத்தனையோ பேரின்
அந்தரங்கள் அவலங்கள்
பிற்பெக்கட் காரனிடம்

..........................



வாழையிலையில் சாப்பாடு
லஞ்ரிசுக்கள் வாரிசுகள்
வாழையிலை வடிவிலே

..........................

வனிதையின் ஆடையை
விலக்கியது காற்று
அதற்கு ஆசையா?

..........................

பெண்களின் முடியழகு
அவிழ்த்து விட்டார்கள்
அவை தரையில் கிடந்தன

..........................

காதலியைக் காத்திருந்தேன்
அண்ணா! இவர்தான்
என் கணவர் என்றாள்

**பிரமன்,**
**கொக்குவில் மேற்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

473

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உங்கள் மனதில் எழும் சந்தேகங்களுக்கான பதில்கள்

**எனக்கு 45 வயது. மலச் சிக்கல் உள்ளது. இதனால் உட லில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள்.**

மலச்சிக்கல் எனப்படுவது ஒரு வாரத்தில் 03 தடவைகளுக்கு குறைவாக மலம் கழித்தல் அல்லது மலத்தின் கடினத்தன்மை அல்லது மலம் கழித்தலிலுள்ள கடினத் தன்மை அல்லது பூரணமாக மலம் கழிக்கவில்லை என்ற உணர்வு என வரையறை செய்யலாம்.

பொதுவாக மலச்சிக்கலானது முறையற்ற உணவுப் பழக்கங்கள், நீர் அருந்துதல் போதாமை, ஒழுங் கற்ற முறையில் மலங்கழிக்க செல்லுதல் போன்றவற்றினால் ஏற்படலாம். இவற்றை விட சில மருத்துவ காரணங்களாலும் மலச்சிக்கல் ஏற்படலாம். உதார ணமாக, தைரொக்சின் குறைபாடு, வேறு சில மாத்திரைகள் பயன் படுத்துதல், வேறு குடல் சம்பந் தமான நோய்கள் போன்றவை யாகும்.

எனவே நீங்கள் மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 லீற்றர் நீராவது அருந்த வேண்டும். உங்கள் உண வில் அதிகளவு நார்ப்பொருளுள்ள உணவுகளை, பழங்கள், மரக்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை விட நீங்கள் தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்க செல்ல உங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்துவர உங்கள் மலச்சிக்கல் நீங்கும். இவற்றை விட நீங்கள் வேறு ஏதாவது மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடிய மாத்திரைகளை பயன்படுத்தினால் அவைபற்றி உங்கள் வைத்தியரிடம் கேட்டு அவற்றை தவிர்த்துக் கொள் ளுங்கள்.

இவற்றுக்கு உங்கள் மலச்சிக்கல் குணமடையாது விடின் வைத்தியரை நாடி உங்களிற்கு மேற்குறிப்பிட்டது போன்று வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்று அறிந்து அவற்றிற்கு உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது என குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அவை என்ன என குறிப்பிடப்படவில்லை. உங்களிற்கு மலச்சிக்கலுடன் நிறை அதிகரித்தல், பசியின்மை, குளிரை தாங்கமுடியாமை, தோல் உலர் வடைந்து காணப்படல், பகலில் நித்திரை தூக்கம், தலைமுடி உதிர்த் தல், போன்றன காணப்படின் இவை தைரொயிட் குறைபாட்டிற்குரிய அறிகு றிகளாகும். எனவே நீங்கள் வைத் தியரை நாடி அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வது சிறந் தது.



**எனது வயது 51, ஒன்பது மாதங்களுக்கு முன் RBS செய்த போது 209mg/dl ஆக இருந் தது. HbA1C டெஸ்ட் 7.7 ஆக இருந்தது. அன்றிலிருந்து சுமார் 6 மாதங்கள் நான் கடுமையான உடற்பயிற்சி செய்து வந்தேன். ஒவ்வொரு கிழமையும் இரத்தப் பரி சோதனை செய்து வந்தேன். FBS சராசரியாக 121 இல் இருந் தது. மீண்டும் HbA1C டெஸ்ட் செய்த போது 6.7 ஆக இருந் தது. எனது தற்போதைய உடல் நிறை 60kg, உயரம் 170cm. எனக்கு உண் மையில் சலரோக நோய் இருக் கிறதா? எனக்கு இது சம்பந் தமான வைத்திய ஆலோசனை தருவீர்களா.**

முதலில் உங்களுடைய நிலை சலரோக நிலையா அல்லது சலரோகத்திற்கு முந்தைய நிலையா எனப் பார்ப்போம். சலரோகத்திற்கு முந்தைய நிலையின் போது சாப்பாட்டிற்கு முன்னராக குருதிக் குளுக்கோசின் அளவு 100mg/dl - 125mg/dl இற்கும் இடையிலும் HbA1C ஆனது 5.7-6.4 இற்கும் இடையிலும் இருக்கும். HbA1c ஆனது 6.5 இற்கு மேற்பட்டிருப்பின் அது சலரோக நோய் உள்ளதாக கொள்ளப்படும். உங்களிற்கு சலரோக நோய் உள்ளது. Metformin என்ற மாத்திரை தொடங்கவேண்டும். உங்களுடைய தற்போதைய உடற் திணிவுச் சுட்டியானது 22.49kgm-2 ஆக உள்ளது. ஒருவருடைய உடற் திணிவுச்சுட்டியானது 18.5 - 23 எனும் அளவினுள் இருக்கலாம். எனவே உங்களுடைய நிறை சாதா ரண அளவிலேயே உள்ளது. எனவே நீங்கள் வேகமான நடை, ஓடுதல், மிதிவண்டி செலுத்துதல், நீந்துதல் போன்ற காற்றுப் பயிற்சியினை நாளொன்றிற்கு 30 நிமிடங்கள் செய்வது சிறந்தது. அத்துடன் உண வுக்கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிப் பதன் மூலம் உங்களின் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

**எனக்கு வயது 31 எனது இரண்டு விதைகளும் விதைப் பையினுள் இருக் கின்றது. ஆனால் ஒன்று உயரமானதா கவும் மற்றையது பதிவாகவும் உள்ளது. இது ஒரு நோயா? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

உயர வித்தியாசம் என்பது இயற்கையானது. இது நோயின் அறிகுறி அல்ல. உங்களுடைய விதைப்பையில் ஒரு விதை மாத்திரமே இருந்து மற்றையதை அடையாளப்படுத்த முடியாமல் இருந் தால் உடனடியாக நீங்கள் வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும். விதையானது விதைப்பையினுள் இறங்காது வயிற்றினுள்ளேயே காணப்படின் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் உங்கள் விதை யானது விதைப்பையினுள் இறங்கி யிருப்பதால் இது பற்றிக் கவலை கொள்ளத்தேவையில்லை

**வயது 32, ஆண் தற்போது தான் திருமணம் முடித்தேன். ஆனால் எனக்கு நீரிழிவு நோய் உள்ளது. இதனால் குழந்தை பெறுவதில் சிக்கல் இருக்குமா?.**

நீரிழிவு நோயை தகுந்த முறை யில் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருப்பதன் மூலம் ஏனைய சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைக்க முடிவதைப்போலவே, பாலி யல் சம்பந்தமான பிரச்சினை களையும் பெருமளவில் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே குழந் தைகள் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகள் இருக்க போவ தில்லை. நீங்கள் இது சம்பந்தமாக மனக் குழப்பம் அடையத் தேவை யில்லை. நீரிழிவை மருத்துவ ஆலோசனைகளுக்கமைய கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் அநாவசிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**நாளாந்தம் பசுப்பால் அருந்துவதால் சளிபிடிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?.**

சிலருக்கு பால்குடிக்கும் போது சளிபிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகை யான வெளிப்பாடாகும். பால்குடிக்கும்போது சளிபிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது. எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப்பாலைப் பாவித்து பாருங்கள் அதனால் உங்களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம். உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவுவகைகள் அனைத்திற்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்தி பொருட் களைப் பாவனையை முற்றிலும் நிறுத்திவிட்டு வேறுவகையான புரதங்களை, சோயா, பால், முட்டை, மீன், என் பவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

Dr சி.சிவன்சுதன்
யாழ்.போதனா வைத்தியசாலை,
பொதுமருத்துவ நிபுணர்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த நிலைமைகளின் போது
# கட்சி பேதமின்றி அரசாங்கத்துடன் கைகோர்க்க தயார் - நாமல்



(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு கட்சி பேதமின்றி, பூரண ஆதரவை வழங்குவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எம்.பி நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2026ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சீரற்ற காலநிலையால் அனர்த்தங்களுக்கு உள்ளாகியுள்ள மற்றும் உயிர்களை இழந்த குடும்பங்களுக்கு எமது அனுதாபங்களை தெரிவிக்கிறோம். அரசாங்கம் என்ற வகையில் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டு கட்சி பேதமின்றி இந்த வேளையில் எம்மால் வழங்கக்கூடிய அனைத்து ஒத்துழைப்புகளையும் நாம் வழங்கத் தயாராகவுள்ளோம்.

அதேவேளை, முப்படையினர், மாவட்ட, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சகல அதிகாரிகளும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் நாம் கௌரவிக்கின்றோம்.

எதிர்வரும் நாட்களில் இந்த நிலைமை தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் இருக்க வேண்டும். தற்போதைய நிலைமையில் அபாயம் மிகுந்த பல பிரதேசங்கள் இருக்கின்றன. இங்கு மக்களின் உயிர்களை பாதுகாக்க அரசாங்கம் உரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியம். மண் சரிவு, வெள்ளம் காரணமாக தற்போது விவசாயத் துறைக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையில் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேசங்களிலேயே இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தை ஒத்திவைத்தாவது மாவட்ட, பிரதேச அபிவிருத்தி குழு தலைவர்களை ஊர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொறுப்புக்களை அதிகாரிகள் மீது சுமத்திவிட்டு இங்கு இருக்க வேண்டாம். அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுங்கள் அவ்வாறு இல்லாமல் வெள்ளம் வழிந்தோடிய பின்னர் அங்கு போய் பலனில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா : 27
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: HNDA, Work (pvt)
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்
தொ.இ: B/16242

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி
11 இல் சூரி செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, PVT WORK
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16243

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
12 இல் செவ்
கி.பா: 16
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16244

பிறப்பு :1994 இந்து
நட்சத்திரம்: ரோகினி
11 இல் சூரி செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Company Work (நெதர்லாந்து)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16246

பிறப்பு: 1997 NRC
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16247

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
2 இல் செவ்
கி.பா: 33 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BBM.முகாமையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/16260

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSC, MSC, IT Intructor
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ: G/16266

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, Canada
எதிர்பார்ப்பு : தகுதியான ஆண்
தொ.இ: G/16267

பிறப்பு : 1999 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
12 இல் செவ்
கி.பா: 28
உயரம்: 5'6"
தகைமை/தொழில்- BBA, MBA, ஜேர்மனி
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16274

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
12 இல் சூரி செவ்
கி.பா: 41 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு : நிரந்தரவேலை
தொ.இ: G/16275

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# சீரற்ற வானிலையால் நாட்டில் பேரழிவு
## மனிதாபிமான நடவடிக்கையில் இலங்கை கடற்படை





(கொழும்பு)

இலங்கையில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை, வெள்ளம் மற்றும் சீரற்ற வானிலை காரணமாக 25 மாவட்டங்கள் முழுவதும் கடும் அனர்த்த நிலை உருவாகியுள்ளது.

பல இடங்களில் வீடுகள் நீரில் மூழ்கியுள்ள நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

இந்த சூழ்நிலையில், இலங்கை கடற்படை நாடு முழுவதும் அவசர மீட்பு மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

வெள்ள நீரில் சிக்கிய குடிமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றும் பணியை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி)


## வேலைவாய்ப்பு

ஹோமாகம, கொடகமவில் உள்ள ஓவன் பேக்கரிக்கு (Oven Bakery) வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு
077 326 7322
(C-348)

## வேலைவாய்ப்பு

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடி தேவை. வயது எல்லை 20-40 இற்கு உட்பட்ட ஆண்கள். தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

மேற்பார்வையாளர் (Supervisor)
- இயந்திர இயக்குநர் (Machine Operator)
- களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)
- சாரதி (Drivers)
- மூடை தூக்கும் தொழிலாளர்கள். கூலித்
- தொழிலாளர்கள் (Laborers)
- கணக்கு நிர்வாகி (Accounts Executive)

(174)

தொடர்புகளுக்கு
RG Brothers, No: 228, Canel Road, Elakanda Hendala Wattala.
077 434 6367

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டும் அமெரிக்கா

## 2 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வெள்ளம் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

அதன்படி, இலங்கையின் நிவாரணப் பணிகளுக்கு உதவுவதற்காக அமெரிக்கா 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை உடனடி உதவியாக அறிவித்துள்ளது.

இந்த கடினமான நாட்களில் அமெரிக்கா இலங்கையுடன் ஒற்றுமையாக நிற்கும் எனவும் அமெரிக்க தூதர் ஜூலி சங் தெரிவித்தார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் அமெரிக்க தூதர் ஜூலி சங் தெரிவித்தார். (நி)

# கண்டியில் பாரிய மண்சரிவு!

## 20 குழந்தைகள் உள்ளிட்ட 120 பேர் மாயம்

**(கொழும்பு) ..................... கண்டி அரநாயக்க அம்பலாங்கந்தை 120 பேரை காணாமல் போயுள்ளதாகவும் அவர்களில் 20 குழந்தைகளும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

மண்சரிவு காரணமாக சிக்கியுள்ளவர்களை மீட்பதில் சிரமம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

கண்டி ஹரிஸ்பத்துவ மாவட்டத்தின் அலவது கொடை - கல்கொட்டுவ பகுதியில் நேற்றுக் காலை பெரிய நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதிகாரிகள் தெரிவித்ததாவது நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் நிலத்தின் நிலைமை மிகவும் அமைதியற்றதும் ஆபத்தானதும் ஆக இருப்பதால் மீட்புக் குழுக்கள் அந்தப் பகுதிக்கு செல்ல முடியவில்லை.



நிலம் சரிவு ஏற்படும் அபாயம் தொடர்வதால் அணுகுவதில் மிகுந்த சிரமம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் குடிநீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படலாம் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (நி)

# ராஜாங்கனை கலா ஓயா பகுதிகளில் சிக்கியிருந்தவர்கள் பாதுகாப்பாக மீட்பு

(இராஜாங்கனை)

ராஜாங்கனை கிரிபாவ பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய 33 பேரை விமானப் படையினர் மீட்டுள்ளதுடன் புத்தளம் மற்றும் அநுராதபுரம் வீதியில் உள்ள கலா ஓயாவை அண்மித்த பகுதியில் பேருந்தில் சிக்கிய நிலையில் வீடொன்றின் கூரையில் தங்கியிருந்த 67 பயணிகளும் தற்போது வெற்றிகரமாக பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

ராஜாங்கனை கிரிபாவ பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய 33 பேரை விமானப் படையினர் ஹெலிகொப்டர் மூலம் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

நேற்றுக் காலை அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை விமானப் படை மீட்பு குழுவினர் எம்ஐ-17 ஹெலிகாப்டர் மூலம் வெள்ளத்தில் சிக்கியிருந்தவர்கள் அனைவரையும் பாதுகாப்பாக மீட்டதுடன் அவர்கள் அநுராதபுரம் விமானப்படை தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, புத்தளம் மற்றும் அநுராதபுரம் வீதியில் உள்ள கலா ஓயாவை அண்மித்த பகுதியில் பேருந்தில் சிக்கிய நிலையில் வீடொன்றின் கூரையில் தங்கியிருந்த 67 பயணிகளும் தற்போது வெற்றிகரமாக பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் மூலம் அவர்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்டவர்களில் ஒரு வெளிநாட்டுப் பெண் ஒருவரும் அடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# சீரற்ற வானிலை குறித்த போலியான சமூக ஊடக தகவல்கள் நீக்கம்

(கொழும்பு)

தற்போதைய சீரற்ற வானிலை தொடர்பான, தவறான மற்றும் போலி யான தகவல்களை வெளி யிடும் போலி சமூகப் பதிவுகள் மற்றும் செய் திகளை அடையாளங் கண்டு, அவற்றை அகற்றுவதற்கு அரசாங்கம் அத னுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகத் தளங்க ளில் பரவும் சரிபார்க்கப் படாத, புதிய விடயங்களை நம்ப வேண்டாம் என்றும், அதற்குப் பதிலாக துல்லி யமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களை வழங்கும் அரச மற்றும் பிற அதிகாரப்பூர்வ ஊடகங் களை பின்பற்றுமாறும்பொது மக்களை, அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த காலகட்டத்தில் தேவையற்ற பீதியை ஏற்படுத்திய, தவறான தகவல் கள் பரவுவதைத் தடுக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# திருமலையில் நீரில் மூழ்கிய 10 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள்

(திருமலை)

கடந்த சில நாட்களாக நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையால், கந் தளாய் குளத்தின் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக நீர்த் தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

கந்தளாய் நீர்ப்பாசனப் பொறியாளர் பிரிவினரின் தகவலின்படி, சுமார் 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப் பட்டுள்ளன.

கந்தளாய், வான்-எல, வட்டுக்கச்சி, வென்றாசன் புற, முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், ஆயிலியடி உள்ளிட்ட பல பகுதிகளி லுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளது.

இதனால், கடன் பெற்று செய்கை செய்திருந்த விவசாயிகள் மிகுந்த இழப்புகளைச் சந்தித்து, நிர்ப்பந்தமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். வெள்ளத்தால் ஏற்பட்ட இந் நஷ்டத்துக்கான நட்டஈடு வழங்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக் கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# இலங்கை மோசமான வானிலை பாதிப்பு வெளிநாட்டினருக்கு சிறப்பு விசா

## குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறை அறிவிப்பு

(கொழும்பு)

நவம்பர் 28 ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு இலங்கையிலிருந்து புறப்பட திட்டமிடப்பட்டிருந்த வெளி நாட்டினருக்கு, விமான ரத்து அல்லது வானிலை காரணமாக ஏற்பட்ட பய ணச் சிக்கல்கள் காரணமாக அவ்வாறு செய்ய முடியாமல் போனால், விசா நீட்டிப்புக் கட்டணங்கள் மற்றும் காலாவதியான தங்கல் அபராதங்கள் விலக்கு அளிக்கப்படும் என்று திணைக்களம் தெரிவித் துள்ளது.

கட்டுப்பாட்டை மீறி தவிர்க்க முடியாத தாமதங் களை அனுபவித்த பய ணிகளுக்கு ஆதர வளிக் கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக திணைக்களம் ஒரு அறிக்கையை வெளி யிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் கூடுதலாக, குறுகிய கால சுற்றுலா அல்லது வணிக விசா வைத்திருப்பவர்கள் மற்றும் குடியிருப்பு விசா வைத்திருப்பவர்கள் தங்கள் விசா நீட்டிப்பு சம்பிரதாயங்களை முடிக்க ஏழு நாட்கள் சலுகை காலம் வழங்கப்படும் என கூறப் பட்டுள்ளது.

அத்துடன் குறுகிய கால சுற்றுலா விசாவை நீட்டிக்க, துறையின் ஆன்லைன் மூலம் பதிவு செய்யலாம் https://eservices.immigration.gov.lk/vs/login.php, எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக்கு நன்மை செய்வதே நமது நோக்கம், நமது பெயரைப் பறைபறைவதன்று .- விவேகானந்தர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## இயற்கையின் சீற்றம் உணர்த்துவது என்ன?

நம் முன்னோர்கள் இயற்கையை வழிபட்டார்கள் என்பதை வரலாற்றினூடு நாம் அறிகின்றோம்.

இயற்கை படைத்தருளிய இறைவன் தன்னை வழிபடுவதை விட, தான் படைத்த இயற்கையை வழிபடுவதன் மூலம் மனித குலம் தானும் ஏனைய ஜீவராசிகளும் வாழுகின்ற பிரபஞ்சத்தைப் பாதுகாக்க விரும்பினான்.

அவ்வாறு செய்யும்போதுதான் இயற்கை மனித குலத்திற்கும் ஏனைய படைப்புகளுக்கும் தொன்று தொட்டு தன்னை ஈகை செய்யும்.

எனினும் இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்கள், தகவல் தொடர்பாடல்களின் அதீத வளர்ச்சிகள், அணு ஆயுதம் உள்ளிட்ட போர் ஆயுதங்களின் உற்பத்திகளும் அவை கடலுக்கு அடியில் பரீட்சிக்கப்படுவதும் இயற்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவை தவிர, மனித சமூகத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் அதீத உற்பத்திகளும் அவை எரியூட்டப்படுவதனால் ஏற்படுகின்ற நச்சுக்களும் காற்றோடு கலந்து தூய்மையான இயற்கையின் சம நிலையைக் குழப்பி நிற்கின்றன.

இவற்றோடு மட்டும் இயற்கையின் சமநிலை குழம்பி விட்டது என்று மட்டுப்படுத்திவிடாதீர்கள். மாறாக, உலகின் இன்றைய அனைத்து நடவடிக்கைகளும் இயற்கையை சீண்டுவதாக இருப்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

நாடுகளுக்கு இடையே இடம்பெறும் யுத்தத்தின் போது வீசப்படுகின்ற குண்டுகள், ஏவுகணைகள், நச்சாயுதங்கள் இந்த பிரபஞ்சத்தை நடுங்க வைக்கின்றன.

இதையும் கடந்து நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்தின் காரணமாக கண்டறியப்பட்டுள்ள உக்க முடியாத இலத்திரனியல் சாதனங்கள் கடலில் கொட்டப்படுகின்ற நாசகாரத்தை என்னவென்று சொல்வது.

இவற்றையும் கடந்து விவசாயம், கைத்தொழில் என அனைத்து தொழில் துறைகளிலும் உபயோகிக்கப்படுகின்ற நச்சு மருந்துகள், இரசாயன உரங்கள், உணவுப் பண்டங்களில் சேர்க்கப்படுகின்ற இரசாயனக் கலவைகள் என அனைத்தும் இயற்கையின் வளங்களை கந்தறுத்துள்ளன.

கூடவே சட்டவிரோத மணல் அகழ்வு, கல்லகழ்வு, காடழிப்பு என எல்லாமும் சேர்ந்து நாம் இயற்கையை குழப்பி விட, அதன் விளைவாக இயற்கை தனது கட்டுப்பாட்டை இழந்து சீற்றம் கொள்கிறது.

இதன் விளைவே நம் இலங்கைத் திருநாடு உட்பட உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தமாகும்.

அந்தோ! அழகிய இலங்கைத் திருநாட்டை இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் இரையாக்கி அதன் பொருளாதாரத்தைக் கந்தறுத்து விட்டு, இப்போது வெளிநாடுகளுக்கு நம் நாட்டில் முதலிடுவதற்கு இடம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமே காலி முகத்துக் கடலை ஆழமாக்கி, கடலின் ஒரு பகுதி நிரவப்பட்டு அங்கு வர்த்தக கட்டுமானங்கள் நடந்தாகியுள்ளன.

என்ன செய்வது இயற்கையின் கொடையான கடலை கூட நாங்கள் அழிக்கும் போது அதன் எல்லைப் பகுதியை மாற்றும் போது, இயற்கை சீற்றமடையாமல் என்னதான் செய்யும், என்னதான் செய்ய முடியும்.

# வெள்ளப் பேரிடரால் தொடர்பற்ற தனித் தீவானது மன்னார் மாவட்டம்

## 79 ஆயிரத்து 946 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

மன்னார் மாவட்டத்திற்கான இரு முக்கிய பாதைகளான மன்னார்-மதவாச்சி பிரதான பாதை மற்றும் மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான பாதை ஆகியவை வெள்ள நீர் காரணமாக போக்குவரத்துக்கள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மக்களை வெளியேற்ற முடியாத நிலையும் காணப்படுகின்றது.

தற்போது பெய்து வருகின்ற மழை மற்றும் வேறு மாவட்டங்களில் இருந்து குளங்களின் மேலதிக நீர் ஆகியவை பெருக்கெடுத்து மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களைத் தனித்து விட்டுள்ளது.

இதன் காரணமாக கூராய் மற்றும் குஞ்சுக்குளம் போன்ற பகுதிகளில் பல மக்கள் தனித்து விடப்பட்டுள்ள நிலையில் தம்மைக் காப்பாற்றுமாறு கூறி இருக்கின்றார்கள்.

அவர்களைப் படகு மூலம் அழைத்துச் செல்வதற்கு அதிகளவான நீர் ஓட்டம் காரணமாக குறித்த நடவடிக்கை மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்க விமானப் படையின் உதவியை நாடியுள்ள போதும், சீரற்ற காலநிலை காரணமாகக் குறித்த நடவடிக்கைகளும் இதுவரை கைகூடவில்லை. பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் முப்படையினர், பொலிஸாருடன் இணைந்து அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கிய ஆறான மல்வத்து ஓயாவில் நீர் 19 அடிக்கு அபாய கட்டத்தில் பாய்வதால், ஆற்றங்கரையோர கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பாலியாறு, பரங்கியாறு ஆகியவற்றிலும் அதிக நீர் வெளியேற்றப்படுகிறது.

மேலும் மாவட்டத்தில் உள்ள 400க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பியுள்ளன. சன்னார் குளம் உடைப்பெடுத்துள்ளதால் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலகர்களினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து சேகரிக்கும் நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

(ம-7,285)

### வறிதாகும் நிலையில் இரத்தவங்கிகள்

## உதிரம் கொடுத்து உயிர்களைக் காத்திடுமாறு அவசர கோரிக்கை

நாட்டில் தற்போது நீடிக்கும் அனர்த்த நிலைமை காரணமாக, அவசர தேவைகளுக்கான இரத்தத்தைச் சேகரிப்பதில் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளதாகத் தேசிய இரத்தப் பரிமாற்றல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஸ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், "வழமையாக எமக்கு நாளாந்தம் சுமார் ஆயிரத்து 500 அலகுகள் இரத்தம் தேவைப்படுகிறது.

ஆனால், தற்போதைய அனர்த்த நிலைமையால் நடமாடும் இரத்ததான முகாம்களை எம்மால் நடத்த முடியாதுள்ளமையால் அத்தியாவசியமான இரத்தத்தின் அளவை எம்மால் சாதாரணமாகச் சேகரிக்க முடியவில்லை. இந்த நிலைமை நீடித்தால், இரத்தத்தின் கையிருப்பு குறைந்து, தேவை பூர்த்தி செய்வதில் பாரிய நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது

எனவே இதனைக் கருத்தில் கொண்டு, தேசிய ரீதியில் தேவையை நிவர்த்தி செய்ய, நாடு முழுவதுமுள்ள இரத்த வங்கிகளில் தகுதிவாய்ந்த அனைவரும் உடனடியாக முன்வந்து, இரத்ததானம் செய்து இந்தத் தேசிய நெருக்கடியைத் தீர்க்க எம்மோடு கைகோர்க்க வேண்டும் என்றார்.(ம-7)

### சீரற்ற காலநிலை

## சதுரங்கப் போட்டி பிற்போடப்பட்டது

பருத்தித்துறை பிரதேசசபை தொழிலாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று (30) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சதுரங்க சுற்றுப் போட்டியானது தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துப் பருத்தித்துறை பிரதேசசபை தொழிலாளர் நலன்புரிச் சங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பின் படி போட்டியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களின் நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

போட்டி இடம்பெறும் புதிய திகதி உத்தியோக பூர்வமாக பின்னர் வெளியிடப்படும். இது தொடர்பான மேலும் தகவல்களை அறிந்துகொள்ள 077 226 9799 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### வவுனியா கந்தசாமி நகரில்

## வெள்ளத்தில் சிக்குண்டோர் கடற்படையினரால் மீட்பு

செட்டிகுளம், கந்தசாமி நகர்ப் பகுதியில் வெள்ளம் காரணமாக வீட்டின் கூரையிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம் கந்தசாமி நகர் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் வீட்டை சூழ்ந்த கடும் வெள்ளத்தின் காரணமாக வீட்டின் கூரையிலிருந்த நிலையில் விமானப்படை உதவியுடன் குறித்த குடும்பத்தினை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதும் சீரற்ற காலநிலை காரணமாக உலங்குவானூர்தி செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் குறித்த ஆறு பேரும் கடற்படையினருடைய உதவியுடன் இரண்டு கட்டமாகப் படகு மூலம் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழான பிரதேசங் களில் வெள்ள பாதிப்பிற்குள்ளான நிலமை யில் இராணு வத்தி னரின் உதவியுடன் மீட்பு நடவ டிக்கைகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை கார ணமாக பல்வேறு பகுதி களிலும் பலத்த பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதுடன் காற் றுடன் கூடிய அதிக மழை பெய்து வருவதன் காரண மாக கிளிநொச்சி மாவட்டத் தின் பிரதான குளமான இரணைமடு குளம் தற் பொழுது நீர் மட்டம் அதி கரித்துள்ளதன் காரணமாக இரணைமடு குளத்தின் அனைத்து வான் கதவுக ளும் திறந்து விடப்பட்டுள் ளன.

அதேவேளை கனகாம் பிகை குளமும் தற்பொழுது வான் பாய்ந்த வண்ணம் உள்ளது. கல்மடு குளமும் கொள்ளளவை எட்டி வான் பாய ஆரம்பித்துள்ளது.

எனவே அனர்த்த நிலமையினை கருத்தில் கொண்டு குளத்தின் நீரேந்தும் பகுதிகளின் கீழ் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற் படுமாறும் தமது பாது காப் பினை உறுதி செய்து கொள்ளுமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8)





பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட புலோப்பளை கிழக்கு பகுதியில் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக வீழ்ந்துள்ள மரத்தினை தவிசாளரின் பணிப்பிற்கமைய பிரதேச சபையினரால் வெட்டி அகற்றப்பட்டன

## அனர்த்த தணிப்பு நடவடிக்கைகளுக்காக 1.55 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்த நிலவரம் தொடர்பாக அனர்த்த முகா மைத்துவ பிரிவின் பணிப் பாளர்நாயகம் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 1.55 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டதாக யாழ். மாவட்ட செயலக ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் யாழ்ப் பாணம், தென்மராட்சி, காரை நகர், பருத்தித்துறை, வேலணை, சண்டிலிப்பாய், கோப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை ஆகிய பிர தேச செயலாளர் பிரிவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே பிரதேச செயலர்களுக்கு 0.57 மில்லியன் ரூபாய் அனர்த்த தணிப்பு நடவடிக்கைகளுக் காக விடுவிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (8)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற "சித்து விலி சித் தம் - 2025" அகில இலங்கை சித்திரம், சுவரொட்டி மற் றும் கார்ட்டூன் போட்டிகளில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ் களும் வழங்கும் நிகழ்வு அண்மையில் மாவட்ட செயலக திறன் விருத்தி நிலைய மண் டபத்தில் சிறப்பாக இடம்பெற் றது.

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர் து. கோதை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிர மணியம் முரளிதரன் விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் உதவி மாவ ட்ட செயலாளர் H. சத்தியஜீவிதா, வடக்கு மற்றும் தெற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைகளின் ஆசிரியர் கள், பெற்றோர்கள் மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர். (8)





வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்குமாறு ஒரு தொகுதி அத்தியாவசிய பொருட்கள் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

## இராசிபலன்

30.11.2025
கார்த்திகை 14, ஞாயிற்றுக்கிழமை
தசமி பிற்பகல் 4.34 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 9.10 மணிவரை
சுப நேரம் 9.14-10.44 மணிவரை
இராகுகாலம் 4.44-6.14 மணிவரை

சந்திராஷ்டமம்,
மகம் , பூரம்

வளவன்

**மேஷம்** தொழில் ரீதியான பய ணங்கள் இடம்பெற லாம், குடும்பத் தேவை களைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** புகழ்மிக்கவர்களின் சந் திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங் களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலன் சிறாகும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**துலாம்** பொது வாழ்வில் புகழ் கூடும், விருந்துகளில் கலந்து கொள்ள அழை ப்புக்கள் வந்து சேர லாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், நட்பு வட் டம் விரிவடையும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை பெறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**சிம்மம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, விர யங்கள் மேலோங்கும் நாள், நடப்ப தெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சி கள் கைகூடும், கல்யான க்கனவுகள் நனவாக லாம், பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளி தில் ஈடேறும் நாள், சுபகாரியப் பேச்சுக்களின் முன்னேற்றம் காணும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** அரசு வழியில் அனுகூ லமுண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறை வேறும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், போசன நன்மையுண்டு.

**கன்னி** விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு, தன்னம்பிக்கை யோடு செயற்படுவீர் கள், பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், பயணத்தால் பிரபலமான வர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மீனம்** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

விஷம் தீர வைத்தியன் வேண்டும், பாவம் தீர தெய்வம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் வடக்...

இதில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகேஸ்வரன் (வயது-68) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 22ஆம் திகதி வயலுக்குச் சென்றுவந்த நிலையில் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

நாட்டு வைத்தியம் செய்த நிலையில் உடற்சோர்வு காரணமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (28) காலை சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று சனிக்கிழமை (29) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் எலிக் காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## அசாதாரண...

வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, நேற்று முன்தினம் (28) முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கடலுக்குள்...

பல்லைக்கழக புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட காலநிலை தொடர்பான செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

டித்வா புயலின் உள்வளையத்தின் பின்பகுதி கடலுக்குச் செல்கின்றது. அதன் விளைவே தற்போது வடக்கு கிழக்கு மாகாணங்கள் பெற்றுக்கொள்ளும் இந்த மிதமான அல்லது சற்று கனமான மழை இன்று காலை வரை தொடரும் வாய்ப்புள்ளது.

அத்தோடு வடக்கு மாகாணத்தில் இந்தப் புயல் முழுவதும் கடலைச் சென்றடையும் வரை காற்று சற்று வேகமாக வீசும் (மணிக்கு 40-60 கி.மீ.) என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே காற்று வேகத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

ஒரு புயலின் மிக ஆபத்தான பகுதி உள்வளையமே. வலுவான காற்றையும், அடர்த்தியான ஈரப்பதன் மிக்க முகில்களையும் கொண்ட உள்வளையமே புயலின் மிக ஆபத்தான பகுதி. அது நீர்ப் பகுதியிலிருந்து நிலப்பகுதிக்குள் வரும்போதும், நிலப் பகுதியிலிருந்து நீர்ப் பகுதிக்குச் செல்லும்போதும் அமைதியாகச் செல்லாது. இதுவே இலங்கை முழுவதும் இந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

இன்று இரவு இதன் வெளிவளையமும் வெளியேறிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மழை குறைந்தாலும் குளங்களுக்கான நீர்வரத்து அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகமாகவே இருக்கும்.

ஆகவே வடக்கு மாகாணத்தின் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம்.

வடக்கு, வட மேற்கு, கிழக்கு கடற்பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முல்லைத்தீவு...

ஏ35 பிரதான வீதியில் நாயாறு பாலம் உடைந்து வீழ்ந்ததினால் முல்லைத்தீவு - கிளிநொச்சிக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த கன மழை காரணமாக ஏ35 பிரதான வீதியில் புளியம்பொக்கணைப் பகுதியில் அமைந்துள்ள நாயாறு பாலமே தாழ் இறங்கி உடைந்து வீழ்ந்துள்ளது.

இதனால் கிளிநொச்சி முல்லைத் தீவுக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. (ம-7,316)

## யாழ்ப்பாணத்தில்...

தெரிவித்தார்.

இதேவேளை தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், காரைநகர், நல்லூர், கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 966 குடும்பங்களைச் சேர்ந்த 3052 அங்கத்தவர்கள் 36 பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலாளர்களினால் வழங்கப்பட்டு வருகின்றது.

4904 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 872 அங்கத்தவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 3 வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 163 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனத் தெரிவித்தார். (ம-7,33)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## தொற்று நோய்...

டுள்ளதாக யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்

அண்மைய நாட்களில் பெய்த மழை காரணமாக பல்வேறு சிக்கலான நிலைகள் உருவாகியுள்ளன. குறிப்பாகத் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

மழைநீர் பல்வேறு வாழ்விடங்களில் புகுந்ததன் காரணமாக லெப்டோஸ்பைரோசிஸ் நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மேலும் தோல் வியாதிகள், சுவாசத் தொற்றுகள், வயிற்றோட்டம் போன்ற நோய்களும் ஏற்படலாம்.

ஆகவே, கீழ்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அசுத்தமான நீரில் நடைபயணம் செய்த பிறகு, அல்லது அந்தப் பகுதிகளில் சென்று வந்தால், சவர்க்காரம் பயன்படுத்தி கை, கால் உள்ளிட்ட உடல் பகுதிகளை நன்றாகக் கழுவ வேண்டும்.

சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும்.. கொதிக்கவைத்த நீரைப் பருகுவது சிறந்தது.

வாழ் விடங்களை சுற்றியுள்ள தூய்மையாக வைத்திருக்க வேண்டும். சுகாதாரமற்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும். உடல் நலத்தில் கவனம் செலுத்தி, நோய்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க வேண்டியது அவசியம்.

வைத்திய சிகிச்சை தேவைப்படும் போது தாமதமின்றி வைத்தியசாலைக் குச் செல்ல வேண்டும் எனத் தெரிவித் துள்ளார். (ம-7)

## வெளிநாட்டு நன்கொடைகள்

# பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதை துரிதப்படுத்த விசேட பொறிமுறை



(கொழும்பு)

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்குவதில் வெளிநாடுகள், அரசாங்கங்கள், அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வரும் நிலையில் மக்களுக்கு நிவாரணங்களை எளிதாகவும் விரைவாகவும் வழங்குவதற்கான விரைவான பொறிமுறையை நிறுவும் நோக்கில் நேற்று சனிக்கிழமை (29) ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது சுங்கம் மூலம் பொருள் நன்கொடைகளை விடுவிக்கும்போது பல்வேறு வரி செலுத்துதல்கள், தர ஆய்வுகள் மற்றும் அனுமதிகளைப் பெறுதல் ஆகியவற்றை விரைவுபடுத்துவதற்காக, முக்கியமாக வரி விலக்குடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டுப்பொறி முறையின் கீழ் செயற்பட்டு, இந்தப் பொருட்களை விடுவிப்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதன்படி, இந்நாட்டிற்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் பலதரப்பு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு வர்த்தகங்கள் மற்றும் தனிநபர்களால் வழங்கப்படும் உதவிகள் என்று நான்கு முக்கிய வகைகளாகப் பிரித்து இனங்காணப்பட்டன.

ஏற்கெனவே அரசாங்கம் நாட்டிற்கு அவசரமாகத் தேவைப்படும் பொருட்களின் பட்டியலை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணையதளத்தில் பட்டியலிட்டுள்ளதுடன், வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையம் பெறுநராக பெயரிடப்பட வேண்டும் என்றும் அவ்வாறு செய்யும்போது, அந்தப் பொருட்களுக்கான சுங்க வரிகள் மற்றும் பெறுமதி சேர் வரி (VAT) விலக்கு அளிப்பது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இதன்மூலம் பொருள் உதவிகளை செயற்திறனாகவும், முறையான வகையிலும் விடுவிக்க முடியும்.

பொருள் உதவிகளைப் பெறுபவராக இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையம் பெயரிடப்படவில்லை என்றால், சாதாரண நடைமுறையின் கீழ் வரி செலுத்தி விடுவிக்க வேண்டி ஏற்படும்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பப்படும் பொருட்கள் திறம்பட அவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்கான முன் ஏற்பாடுகளுடன், இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகவரி உள்ளிட்ட தகவல்களைக் கொண்ட வழிகாட்டுதல்களை வெளியிடுவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நலத்திட்டங்கள் சென்றடைவதற்கு வழிசமைக்கப்படும் என இங்கு தீர்மானம் எட்டப்பட்டது. (ம-7)

## 'டித்வா'...

நேற்று (29) இரவு 8.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, 25 மாவட்டங்களைச் சேர்ந்த 234,503 குடும்பங்களைச் சேர்ந்த 833,985 பேர் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 34,019 குடும்பங்களைச் சேர்ந்த 122,822 பேர் தற்போது 919 தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் நாடு முழுவதும் பல வீதிகள் மற்றும் பாலங்களுக்குக் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் விமல் கண்டம்பி தெரிவித்துள்ளார்.

அதன்படி, பிரதான வீதிகள் உட்பட நாடு முழுவதும் 206 வீதிகள் தடைப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

10 பாலங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், நுவரெலியா மற்றும் அநுராதபுரம் நகரங்களுக்கான அனைத்து நுழைவு மற்றும் வெளியேறும் வீதிகளும் தற்போது தடைப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் பதினொரு மாவட்டங்களுக்கு வெளியிடப்பட்ட மண்சரிவு சிவப்பு அறிவிப்பு நீட்டிக்கப்பட்டுள்ளது அதன்படி பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு வெளியிடப்பட்ட மண்சரிவு சிவப்பு அறிவிப்புகள் மேலும் நீட்டிக்கப்படுவதாக கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முதியோர்...

மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக பன்னாலாவில் உள்ள முதியோர் இல்லம் நீரில் மூழ்கியது.

குறித்த முதியோர் இல்லத்தில் 25 பேர் இருந்துள்ளனர். அவசரகால மீட்புப் பணியாளர்களால் 14 முதியவர்கள் மீட்கப்பட்ட நிலையில் 11 முதியவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்படுகின்ற அனர்த்த நிலைமையில் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்காக 7,989 இராணுவ வீரர்கள் தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கும் பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை கொண்டு செல்வதற்கும் முப்படைகள் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அதன்படி நாடு முழுவதும் 24,156 பாதுகாப்பு வீரர்கள் 2,453 பேரின் உயிர்களைக் காப்பாற்றி 5,400 பேரை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இந்த மீட்புப் பணிகளுக்காக 23 இராணுவ கவச வாகனங்கள், 60 பெபல் வாகனங்கள் மற்றும் 32 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், தேவையான மீட்பு நடவடிக்கைகளுக்காக விமானப்படை தற்போது பலாலி, ரத்மலானை, கட்டுநாயக்க மற்றும் வீரவில தளங்களில் 07 ஹெலிகொப்டர்களை தயார்படுத்தியுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும், நாடு முழுவதும் 488 பாதுகாப்பு மையங்களில் உள்ள 43,925 பேருக்கு உணவு மற்றும் ஏனைய தேவையான வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் பதுளை, பல்லேகலே, திகன, மருதானை, களனிமுல்ல மற்றும் மட்டக்குளிய ஆகிய இடங்களில் இராணுவம் 08 உணவு தயாரிப்பு தளங்களை நிறுவியுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு முகாமிலும் இடம்பெயர்ந்தவர்களுக்காக உணவு தயாரிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

அத்துடன் 2025.11.27 முதல் 2025.11.29 வரை மேற்கொள்ளப்பட்ட விமானப்படை நடவடிக்கைகளில் 71 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், இடம்பெயர்ந்தவர்களுக்கு 2565 கிலோகிராம் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உணவுகளை விமானம் மூலம் அவர்களுக்குத் தேவையான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண சேவைகளை வழங்குவதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் 80 பேர் கொண்ட குழுவுடன் இந்திய விமானப்படையின் IL-76 விமானம் நேற்று காலை நாட்டை வந்தடைந்ததுடன், தற்போது கொழும்புத் துறைமுகத்தில் உள்ள இந்திய கடற்படையின் விமானம் தாங்கி கப்பலான INS விக்ராந்தின் இரண்டு விமானங்கள் கம்பஹா மற்றும் குளியாப்பிட்டி பகுதிகளில் அனர்த்த நிலைமையைக் கண்காணிக்க ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ மேலும் தெரிவித்தார். (ம-7)

# இடைத்தங்கல் முகாம்களுக்கு பிரதமர் ஹரிணி விஜயம்



நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்ட டித்வா சூறாவளி மற்றும் கொழும்பில் கடுமையான வெள்ளப்பெருக்கை ஏற்படுத்திய களனி நதி பெருக்கெடுத்ததைத் தொடர்ந்து, பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று (29) பிற்பகல் மேல் போமிரியா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களின் நிலைமையை மதிப்பாய்வு செய்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள போமிரியா ஜூனியர் பாடசாலையில், பிரதமர் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களின் நலனை விசாரித்தார்.

உணவு மற்றும் சுகாதாரப் பொருட்கள் உட்பட இடம்பெயர்ந்தவர்கள் தற்போது எதிர்கொள்ளும் பற்றாக்குறைகளை அவர் ஆய்வு செய்தார். மேலும் இந்தத் தேவைகள் விரைவாகப் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் நிவாரண நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தார். (ம-7)


## வாழ்த்துகின்றோம்

கடந்த 23.11.2025 தனது 70 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய காரைநகரைச் சேர்ந்த

**திரு.கனகசபை தர்மகுலசிங்கம்**

அவர்களுக்கு எமது இதயம் கனிந்த பிறந்தநாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் நீடூழி காலம் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் :
வனஜா (லண்டன்)
கிரியா (லண்டன்)

70th Happy Birthday

(C-4449)






நாடு பாரிய வெள்ளப் பேரிடரில் சிக்கியுள்ள நிலையில் ஆபத்பாந்தவனாக உதவிக் கரம் நீட்ட நவீன பேரிடர் மீட்பு கருவிகள் சகிதம் களமிறங்கிய இந்திய மீட்புக் குழு.


## உடன் விற்பனைக்கு

01.யாழ். நல்லூர் குறொஸ் வீதியில் 6 பரப்புக் காணியின் விலை 10 கோடி ரூபாய்.

02.யாழ். பிறவுண் வீதியில் பிறவுண் றோட் முகப்புடன் 30 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட காணித் துண்டின் விலை 4 கோடி ரூபாய்

03.யாழ். கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் VF தம்பி லேனில் 2 ½ பரப்பில் அமைந்த வீடும் காணியும்

04.யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 30 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட தனிக் கடையும் உடன் விற்பனைக்குண்டு.

(C-4450)

**077 723 2535**

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

**வட்டுக்கோட்டை மாவடி மூளாய் றோட் உடுக்கியவளை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் 7 பரப்பு காணியில் பிரிவிடல் செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள வீட்டுடன் 3 பரப்பு 5 குளி உடைய காணி விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு :

: +61401107584

: 077 248 7024

(6019)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible] இல. 91, பிறவுண் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.